ஸ்ரீ:

# கான வித்யா ப்ரகாசினி.

(ஓர் இனிய மாதப்பத்திரிகை.)

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார் — பாரதி.

மலர் 1. } டிசம்பர்–1931. { இதழ் 3.

## ஊன்றி உணர்தற்குரிய உண்மைகள்.

1. நாமே நமக்குத் துணையானால்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்
சற்றுமிதற்கோர் ஐயமுண்டோ ?

2. நெஞ்சிற் கருணை நிறைந்தவர்க்கு
நேயம் கொண்ட நெறியோர்க்கு
விஞ்சும் பொறுமையுடையவர்க்கு
வெல்லும் படைகள் வேறுளவோ ?

3. உள்ளந்தேறிச் செய்வினையில்
ஊக்கம் பெருக உழைப்போமேல்
பள்ளம் உயர்மேடாகாதோ
பாரைபொடியாயப் போகாதோ ?

4. ஜாதி ஜாதி யென்றுநிதம்
சண்டைபோட்டு மண்டைகளை
மோதிமோதி யுடைப்பதொரு
மூடச்செயலென் றுணரீரோ ?

5. வாட்டும் உலகில் வழுத்தரிய
வாழ்க்கைத்துணையாம் மங்கையரை
ஆட்டும் பொம்மை அடிமைகளாய்
ஆக்கிவைப்ப தழகாமோ ?

6. காலநதியின் கதியதனில்
கடவுளாணை காண்பீரேல்
ஞாலமீது சுகமெல்லா
நாளுமடைந்துவாழ்வீரே.

—தேசிக விநாயகன்.

உ

# ஜனநாயகக் கல்வி.

ஓர் நாள் நெல்ஸன் என்ற ஆங்கிலச்சிறுவன் தன் கிராமத்திற்குச்சற்று அப்பால் இருந்த மலைப்பிரதேசத்திற்குச்சென்று விளையாடிவிட்டு வெகுநேரங்கழித்து வீடு திரும்பினன். வீட்டிலுள்ளவர்கள் ‘எங்கு சென்றிருந்தாய்?’ எனவினவினர். மலைச்சரி ில் விளையாடச் சென்றிருந்தேன்? என நவின்றன் பாலகன். னப்பா குழந்தாய்! உனக்குப்பயமாயிருக்கவில்லையா?’ வென்று ட்டார்கள். அதற்கு ‘பயம் என்பது கருப்பாயிருக்குமா அல் சிவப்பாயிருக்குமா?’ என்று கேட்டனனம்! இச்சிறுவன் ன் பிற்காலத்தில் நடந்த யுத்தங்களில் ஆங்கிலேயர்களின் ஜெய ரிகையை முழக்கினன்.

மேற்குறித்த கதை சிறிதேனும், மகத்தான வோர் தத்து த்தை விளக்குகின்றது என்பதில் சந்தேகமில்லை. அதாவது ுவன் வளர்க்கப்பட்டவிதமும், அவனுக்கு அளிக்கப்பட்ட கல்வி றையும் அத்தகைய மனப்பான்மை யுண்டாக்கும் வன்மை பாருந்தியனவா யிருக்கின்றன. பொதுவாகக் கூறுமிடத்து, ஒரு தசம் முன்னேற்றமடைவதற்கு, இத்தகைய கல்வி முறையும், பொதுநலத்திற்குறிய தொழில்களும், பொதுநல உணர்ச்சியும் உண்டாகவேண்டுமென்று ஏற்படுகிறது. இவை யெல்லாம் ஜனநாயகத்துள் அடங்கிநிற்கின்றன.

ஜனநாயகத்துவப் பேரொளி ஜகமெங்கும் வீசுகிகிறது. சகல நாடுகளிலும் சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம் இவைகள் செழித்தோங்குகின்றன. காங்களே தங்கள் மன்னர் என்னும் உணர்ச்சி தீவிரமாகப் பரவிவருகிறது. ஆயினும் இதே நாடுகளே எல்லாத்துறைகளிலும் முன்னணியில் நிற்கின்றன! இதுவே இந்த இயக்கத்தின் வலிவுக்கு, திறமைக்குப் போதியசான்று. அமெரிக்க ஜெனநாயகத்தைப் பாருங்கள். பொருளாதார சுகாதார கல்வியாதாரத்துரைகளில் அணுவளவு சந்தேகமின்றிப் பிற நாடுகளைப் புறங்காட்டுகின்றது! என்? அதன் ஜனநாயத்துவமே!

ஜன நாயகத்தைப் பலர் விரும்புவர்; ஒற்றை யரசர் ஆட்சியைச் சிலர் விரும்புவர். இரண்டிலும் நன்மையுமுண்டு தீமையு

முண்டு. இதைப்பற்றிய விசாரணை அரசியல் வாதிகளுக்கே யல்லாது நமக்கில்லை. ஆனால் ஜனநாயகத்தின் ஓர் பகுதியை மட்டும் நாம் இங்கு ஆராயப்புகுவாம்.

நாம் இங்கு குறிப்பிடும் ஜனநாயகக்கல்வியென்பது பல கலைகளையும் பலரறிய, அனுபவ வாழ்க்கைக்கு ஏற்றவாறு பயிலுதலே. பல விஷயங்களில், இப்பொழுதைய ருஷ்யக்கல்வி முறை போற்றத் தகுந்ததாகும். அது கம்யூனிட்ஸ்ட் அல்லது தொழிற் பிரதானமான கல்வி என்று அழைக்கப்பட்டபோதிலும், நமக்கு வேண்டிய பல அம்சங்கள் பொருந்தியிருக்கின்றது. முதலாவது அதன் நோக்கம் வாழ்க்கைக்கு ஏற்றவாறு மக்களைச்செய்தலாகும். குழந்தைகளின் — ஏழை, பணக்காரர் யாராயினுஞ்சரி — நுண்ணறிவை விருத்தி செய்யவேண்டிய விதத்தில் கல்வி கற்பிக்கப்படுகிறது. அவரவர் மனப்போக்கின்படி, கட்டாயமாக கல்வி பயிலுவதற்கு வசதி யளிக்கப்பட்டிருக்கிறது. ஏழைகளுக்கு பல பொ ஸ்தாபனங்களிலிருந்து உதவி செய்யப்படுகிறது. ஒவ்வொருவ தனித்தனி, விஷயங்களை ஆராய்ச்சி செய்து, பிறகு கூட்டங்க முடிவுசெய்கிறார்கள். இதனால் ஒருவர் கற்றது மற்றவருக்குத்தெ விக்கப்படுவதுடன் உண்மையும் கண்டுபிடிக்கப்படுகிறது. இ முறையில் புத்திவிசாலம் அமோகமாக உண்டாகிறது. ஒரு சில வியாபாரவித்தையைப்பயின்று அங்கங்கே வெளியிற்சென்று விய பாரிகளிடம் தங்கட்கு வேண்டியவைகளைக் கேட்டுத் தெளிந்து கொள்கின்றனர். கைத்தொழில் பயிலும் மாணவர்கள், தொழிற் சாலைகளுக்குச் சென்று வியாபார ரகசியங்களை (Trade secrets) த்தெரிந்து கொள்கின்றனர். இவ்வளவிலும் உபாத்தியாயர் இவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்! இப்படியாக மாணவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே நடத்திக் கொள்கின்றார்களே யொழிய பிறருக்காக ஒருபோதும் நடப்பது கிடையாது. ஒவ்வொரு வகுப்பையும் பிள்ளைகளே யடக்கியாள்கின்றனர். உபாத்தியாயர்கள் மாணவர்களை யடிப்பதென்பதே கிடையாது. அப்படி அடித்த ஆசான்மார்கள் அநேகர் பள்ளிக்கூடத்தைவிட்டு அகற்றப்பட்டிருக்கின்றனர்.

இன்னுமோர்விஷயம் ஈண்டு குறிப்பிடத்தக்கது. அதாவது 18-வயதிற்குட்பட்ட மாணவர்கட்கு மதவிஷயமான போதனைகளோ அல்லது வேதாளக் கதை முதலியவைகளையோ போதிக்கக்கூடாதென்ற கட்டாய திட்டம் ஏற்படுத்தியிருக்கின்றனர். அப்படிச்செய்வதால் கட்டாய நம்பிக்கை இளைஞர் மனதில் ஏற்படாதொழிகிறது. அதனால் அவர்கள் சிந்தனாசக்தி விருத்தியாகிறது.

இரண்டாவதாக கூறப்பட்டவிஷயம் ஆலோசிக்கத்தக்கது. எனினும் அதிலும் உண்மையிருக்கிறதென்பதை யாரும் மறுக்கமுடியாது.

மற்றெல்லா நாடுகளைவிட நம் இந்தியாவிற்கு இந்த இயக்கம் அவசியம் வேண்டியிருக்கிறது என்பது வெள்ளிடைமலை. மிகவும் கேவலமான நிலையில் இருக்கும் இந்திய பொருளாதார நிலைக்கு இதனாற்றான் விமோசனம் ஏற்படவேண்டும். கைத்தொழில் செழிக்கவேண்டும். அதற்கு முன் வரவேண்டியவர்கள் இந்திய முதலாளிகளே யாவர். ஏழைகளால் கைத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும் முடியாது, செழித்துய்யவும் முடியாது. ஆனால் தூண்டிற்காரனுக்கு அதன்மேலேயே கண் என்பது போன்று, பணக்காரர்களுக்குப் பின்னும் பொருள் ஈட்டுவதிலேயே கவனமிருக்கும். ஆதலின் பிறநாட்டுச் சாக்குகளை மலிவாகவாங்கி விற்பனைசெய்தோ, பெருத்த வட்டிக்குக் கடன்கொடுத்தோ செழிப்பார்கள். முதலா து கூறப்பட்ட சாதனத்தைப் பற்றிய நம்பிக்கை யாவையும் குநாளைக்கு முன்பே விட்டொழித்திருக்கலாம். இரண்டாவ கக் கூறப்பட்ட விஷயமும் 'ஸலேமிரா' த்தான். 'கையில் சுமில்லை, கடன்கொடுப்பார் யாருமில்லை' என்ற ஏக்கம் ஏக ாய் பாவி நிற்கிறது. ஆதலின் அங்கும் செழிக்கமுடியாது. ஆனால் கைத்தொழிலின் மூலமே அவர்களுக்கும் ஏனையோர்களுக்கும் விமோசனம் ஏற்பட ஹேதுவிருக்கிறது. தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதில் ஆரம்பத்தில் கொஞ்சம் நஷ்டம் ஏற்படுவது சகஜமானாலும் பின்னர் அதனால் விளையும் நன்மையை உத்தேசித்து, நஷ்டத்தைப்பொருத்து நலமடையவேண்டும்.

தொழிற் சம்பந்தமாய் நாம் முற்கூறியது போன்று, ஒவ்வொரு துறையிலும் பல கலைகளுக்கும் வசதி ஏற்படவேண்டும். சர்வகலாசாலை போன்ற ஸ்தாபனங்கள் பல கலைகளைப் பயிற்றுவிக்கவும், இதனில் ஏழைகளையுதவ பல பொதுஸ்தாபனங்களும் கலை பயின்றவர்களுக்கு வசதியளிக்க மற்றவர்களும் முன் வந்து நாட்டுநலத்தைக் கோருவார்களா?

ஓம் தத்ஸத்.

ஓம்சக்தி.

# பாஞ்சஜந்யம்.

(ஸ்ரீ சுத்தானந்த பாரதி.)

கண்ணன்சரண்.

வேதக் குழலூதி விண்மணக்குந் தென்றல்வளர்
சோதி வஸந்தச் சுகக்கனியுண் டின்குர லார்
கீதைக் குயிலே! கிளர்ந்துவிளை யாடிடவென்
காதல் மணிவண்ணன் கண்ணன்வரக் கூவிடுவாய்!

வேறு.

முத்தார் மூறுவற் கனிவா யமுதப்
பத்திக் குழலிற் பருகச் சொரிவாய்!
எத்திக் குநிறைந் தனை; யெண்ணவெணத்
தித்தித் திடுசிற் சுகனே சரணம்.

யோகத் திரு; வுள்ளதெலாம் யானே
யாகத் தெரி; யன்புடனென்னை நினை;
மோகத்தினை வென்றிடு; முத்தியிதே,
ஏகத் துவமென்றொடு மெய்திடுவாய்;

விடுவா யறம் யாவையும்; வேண்டியெனை
யடைவா யறுவா யடுபாவமெலாம்!
அடியா ரழியா ரதுதிண்ணமெனத்
திடமீந் தனதே சிகனே சரணம்;

பண்ணும் பணியும் பருகுஞ் சுவையும்,
எண்ணும் நினைவும், மெவையும் முனதே;
விண்ணா ரமுதா விமலத் துணைவா!
கண்ணா கருணைக் கடலே சரணம்!

ஓம்! ஓம்! ஓம்! கண்ணனின் பாஞ்சஜந்யம்! — "வாழ்வெல்லாம் யோகம்! யோகப்பொருள்யான்! யான் புருஷோத்தமன், வாஸுதேவன், ஸர்வசரீரி! யானே யனைத்தும்; என்னைச் சரண்புகு! உன்னைக்காக்கிறேன்; அடியார் அழியார்! வாழ்வை எனக்கே கேள்வியாக்கு; பணியும் பயனும் எனக்கே யர்ப்பணி; செய்வதெல்லாம் எனது சிற் சக்தியே; நீ நிமித்தகாரணம்! உலகமெல்லாம் எனது சக்தி லீலையே; நானெனும் அகந்தையறு; ஆசை, அச்சம், சினம், பொறமை,

தளர்வு, தன்னலப் பற்றுகளை நீக்கு; கீழியல்பை, முக்குணமர்மை, தொந்தத்தளையை யுதறிக் கடவுளியல்பிற்குயர்ந்து, கடவுளுணர்விற் கூடிக் கடவுளறத்தில் வாழு; வையத்தில் வாழ்வாங்குவாழ! அறிவிலறி; அன்பிற்கூடு; யோகத்தாலொன்று; அனைவருள்ளத்துமுள்ளேன்; நம்பு, நினை, முயல்! தீரனுயிரு; நிமிர்ந்துநில், வெல்!!" இதுவே அப் பாஞ்சஜன்யத்தின் முழக்கம்.

கண்ணன்—கீதாசாரியன்—தெய்வசேதன வடிவு; பூரணாவதாரன் பரிபூரணயோகி; முக்குணங்கடந்தோன்; உலக லீலையை என்றும் நடத்தும் சச்சிதானந்தன்; சாந்தோக்ய உபநிடத்திலும் கண்ணன், தேவகிசுதன், பிரஹ்மவித்து, கொண்டாடப்படுகிறான்; கண்ணன் பரமாத்மா; அனைத்துள்ளும் அறிவாயிலங்கி, அனைத்தையும் கடவுட்படிக்குப் பரிணமைப் படுத்தும் ஆத்மநாதன்; அர்ஜுனன் உண்மையறியாது கலங்கிநிற்கும் ஜீவாத்மா; வேதத்திலும், இந்திரனும் (தெய்வான்மா), அர்ஜுனை மகன் குத்ஸன் (மனிதான்மா) இருவரும் ஒரேதேரிலேறி ஆன்மப்பகை வெல்லச்செல்லும் உருவகத்தைக் காண்கிறோம்; கௌரவாதிகள் தீயமனோவ்ருத்திகளின் வடிவ; ...ாத்மாவான விஜயன் "எனக்குச் சொந்தமான இவர்களையோ சிதைப்...; நானோ பாவஞ்செய்வது" என்று "நான் எனது" என்னும் பொய்...த்திற்சிக்கி, "எல்லாம் அவன்; அவனின்றி அணுவுமில்லை, தவன் ...வியே நான்; அவனே காலசக்தியாயிருந்து செயல்களைத் தூண்டுகிறான்; ...னியல்பின் வழியே அவன் தூண்டும் செயலையே எது வரினுஞ் செய்...ன்; பயன் அவனது" என்னும் தீரத்துணிவை யிழந்து தளர்கிறான்; ...ன் பற்றுக்கொண்ட புறப்பகைகளை, ஆசாபாசங்களை, ராஜஸ, தாமஸ, ...ாத்வீக அகங்கார வடிவுகளை, பாச இரக்கங்களைத் தளையறுக்கத் தயங்கிச் ...சார்கின்றான். "நான் பரமாத்மா; இது என்காரியம்; நீயில்லாவிடினும் இது நடந்தேதீரும்; அதிர்ஷ்டவசமாக நீ இதற்கு நிமித்தகாரணனாகுய்; இவர்களையெல்லாம் நான் முன்னேயே என்னுள் அழித்து விட்டேன்; இந்த குரு க்ஷேத்திரத்தில் பழைய கொடுமைகள் வீழ்ந்து, புதிய தர்ம ராஜ்யம் வாழவே இம் முயற்சி; நான் எனது என்னும் அகந்தை யறு; என்னைச் சரண்புகு; நீ பாபமற்றவன்; உன் சுதர்மத்தைச் செய்" என்று அர்ஜுனனைக் கண்ணன் துணிவுறுத்துகிறான்; தனது உள்ளன்பினை நட்புறவாலே பக்குவப்படுத்தி, உண்மைக்கு ஒரு அடங்கா வேட்கையை யுண்டுபண்ணி, மெல்லமெல்ல, "ப்ரம்மவுணர்வுடன், பிரம்ம ஞானத்திலூன்றி, பிரம்மார்ப்பணமாக இந்த வேள்வியைச் செய்; எல்லாம் யானே! என்னைச் சரண்புகு; தீமை நீக்குகிறேன்; வருந்தவேண்டாம்" என்று உயர்ந்த வேதாந்த அனுபவத்திற்குத் தயாராக்குகிறான்; குரு க்ஷேத்ரம் என்பது முக்குணப் போர்நிகழும் மனக்களனே. காலசக்தி, யுகமுடிவில் தீமையை விழுங்கிப் புதிய தர்மத்தை நிலை நாட்டவே, வீரன் மூலம் அங்கு போர்புரிகிறான்; உலகவாழ்வே முக்குணப்போராட்டத் தரங்கம்; ஆண்டவன் அதனிடை அருளழகனாகி அன்பரைக் காக்கிறான்; உருத்திரனாகித் தீயரை வீழ்த்துகிறான்; ஒரு கையால் அபயந்தருகிறான்; மறுகையில் நெருப்பை யேந்துகிறான்; ஆருயிரின் தெய்வ முன்னேற்றத்தைத் தடுக்கும் அகந்தை யரக்கரை யழிக்கிறான்; சிற்சபையிலும் ஆனந்த நடனம் புரிகிறான்; முதுகாட்டிலும், கூத்தாடுகிறான்; போரென்பது ஆண்டவனின்

பயங்கரலீலை. மனிதனை ஆசை, அகந்தையாதிய வீரியப் பகைவன்மைகள் பற்றிக்கொண்டிருக்குமட்டும், பொய்யும், பகையும், சதியும் போரும், சிறுமையும், இருளச்சமும் உலகை நீங்கா; அத்யாத்ம யோகத்தால், உள்ளும் புறமும் பரமாத்மவைக்கலந்து, மனிதன் விஞ்ஞானத்திற்கு மேலுயர்ந்து தெய்வ வாழ்வை யடைந்தால்தான், உலகில் அமைதியும் இன்பமும் நிலைக்கும்; மனிதன் கீழியல்பு முற்றும் மாறவேண்டும்; அகந்தையற்று, கடவுளுணர்வில், கடவுட் கலப்புடன் வாழ்வைக் கடவுளுக்கே வேள்வியாக வாழ வேண்டும்; அப்போதே ஏசுநாதரின் வானரசு, நமது ஸத்யயுகம் இங்கு இலகி நிலைக்கும். (இதன் விரிவை யோகவிளக்கத்திற் காண்க.) உலகின் அத்யாத்ம, வொற்றுமை; கடவுள் வாழ்வு, கீழியல்பின் மாயம் விலகி மனிதன், கடவுளறத்துடன் தெய்வநிலை யடைதல், உலகெல்லாம் ஓரன்பும், ஒரு குலமுமாக வாழுதல், இதுவே கீதையின் உட்கருத்து; இதற்கு வழி பரிபூரண சரணாகதியே; வேத ரிஷிகள் கைக்கொண்ட நெறியும் இதுவே; உறுதி, அன்பு, அடைக்கலம், மனமொழி மெய்த்தூய்மை, கீழியல்பின் பொய்களினின்று விடுதலை, கடவுளுணர்வில் கலந்து ஸமத்துவம் இவையே உலகிற்போந்த கடவுட் பெரியோராற் பலவாறு விரித்துக்கூறப்பட்ட ஆனால் இவை இன்னும் காரியத்தில் நிறைவேறாததற்குக் காரணம், மன ஜாதியிடம் அத்யாத்மயோகசக்தியின்மையே யாகும். அன்பு, அறிவு, அ பணியுடன் காலத்திற்கேற்றபடி கடவுளிச்சையைப் பூர்த்திசெய்வதே அ கட்டளை. நமது பாரததேவியின் ஞானத்திருமார்பில் விளங்கும் வீரச்சி மணியான கீதை, ஆன்மப்பசிக்கு அரிய விருந்து; அத்யாத்ம வாழ்வி கற்பகச்சோலை; அது வீழ்ந்தோரை வீரமுற்று எழுப்பும்; தளர்ந்தோர்க் தீரக்கனல்தரும்; கட்டுண்டவருக்கு தெய்வ சுதந்திரந்தரும்; மனப்போ களை அறவே யொழித்து உள்ளமைதியும், கடவுட்பணிக்கு ஆற்றலும் நல் கும்; கீதை ஆத்மசக்தி நூல். உடல், உயிர், மனம் அனைத்திலும் அது சக்தி வெள்ளம்பெருக்கும்; பாரததேசம் இழந்த வொளியை மீட்கும் உலகத்திற்கே புதிய ஆத்ம வொற்றுமை கடவுளின்பவாழ்வு, சுத்த சுதந்திர ஸமத்வ நெறியை அது விளக்கி நிற்கிறது.

கீதை கேவலம் போர்நூலல்ல; அது ஒரு சரித்திரத்தினிடையே வருவதால் அக்காலத்திற்குரிய போர்ப்போர்வையைப் போர்த்திருக்கிறது; கீதையின் உட்பொருளையே நாம் மேல் விளக்கியவாறு கவனிக்கவேண்டும். அதுபோர் நூலாயின் 2-வது அத்யாயம் 37-வது பாட்டுடனேயே முற்றுப் பெற்றிருக்கலாம்; கண்ணன் இரத்தவெறி யூட்டவில்லை; பிரஸ்தானத் ரயத்தின் முடிமணியாக விளங்கி; பலமதாசார்யர்களும் போற்றி விரிவுரை யெழுதியும், இன்னும் இன்னும் புதிய புதிய அத்யாத்ம ரகசியங்களைத் தன்னுள்ளடக்கிச் செழிக்கும், ஞானச்சுரங்கத்தையே கண்ணன் கீதைக்குள் வைத்திருக்கிறான். போரைக் காலவழக்கென மறந்து, இந்த ஞானச்சுரங்கத்திலேயே நாம் ஆழ்ந்து செல்லவேண்டும்; கீதை ஒரு யோக சாஸ்திரம்; அனுபவவேதாந்தம்; அதன்வழிப்படி எச்செயலையும் மனிதன் செய்து வெற்றி பெறலாம்; ஊண், உறக்கம், அரசாட்சி முதல் மனையாட்சி வரையுள்ள ஒவ்வொரு நுண்ணியசெயலையும் கீதை நெறிப்படி யாற்றலாம். நானெனும் அகந்தையின்றி அத்யாத்மவுணர்வுடன், ஆண்டவனுக்கு வேள்வியாக அவ்

வினையாற்றுவதே கீதையின் கட்டளை. கீதையே உலக ஸமரஸத்தாய்; "படு பாவியும் என்னன்பால் புனிதனுகிறுன்" என்கிறுர் பகவான்; கீதை அமர வாழ்விற்கு வழிகாட்டி; அக்ஷரவடிவாயிலங்கும் ஆத்மதர்மசக்தி; துன்பக் கடலைத் தாண்டுவிக்கும் அறிவுக்கப்பல்; ஆத்ம வொளியைத்தூண்டும் உலக குரு; சச்சிதானந்தத்திற்கு வழிகாட்டுந் தெய்வத்தோழன்; உலகை ஆன்மா விலும், ஆன்மாவில் (விஸ்வாத்மாவான) உலகையுங் காட்டும் தெய்வ ஸமரஸக் கண்ணுடி.

கீதை ஒரு குறித்த ஜாதிமதம், கொள்கை, வாதம், சமயம், வகுப் பின் பெயராற் சொல்லப்பட்டதன்று; அதைத் தனியாகக் கர்ம, பக்தி, ஞானயோகமென்றுரைப்பதும் அதன் உலகளாவிய விறிவிற்குச் சிறுமை செய்ததாகும்; அது ஸர்வயோக ஸமன்வயசாஸ்திரம்; ஞானம், பக்தி, கர்மம் அனைத்தையும் ஒருங்கே கூடிய அத்யாத்ம வாழ்வில் சாதகனை அதி ஊன்றுகிறது; அதை ஸன்யாஸிகளுக்கே தகுந்த நூல் என்னும் அறியாமை யும் உலகில் வழங்கிவருகிறது; அதைக் கூறினவனும், ஸந்யாஸியல்ல; கட்டவனும் அல்ல; இருவரும் பழுத்த இல்லற வீரர்; வினைமுளைத்து, ன்பலர்ந்து, ஞானம் பழுத்து, ஆண்டவனுக்கே அப்பழத்தை நிவேதிக் அகத்துறவையே கீதை உபதேசிக்கிறது. கீதா ஸாதகர் அஞ்சாத ஆன்ம ர்; ஆண்டவனுக்கே அன்பும் அடைக்கலமும் பூண்டு அவன் கட்டளையை ற்றுவோர். கீதையை மறந்த பாரதம் வீழ்ந்தது; கீதையைப் பயின்ற ரதம் இனி ஆயிரங்கதிர்கொண்டு, உலகின் அமரவாழ்வுச் சுடராயிலங்கும்; ன்னை வேதவேதாந்த சிங்கமென்றறிந்த அரிக்குறள் ஆடுகளுக்கஞ்சுமா? உபநிடதம், கீதை, பிரம்ம சூத்திரம், திருவாசகம், திருவாய்மொழி, திருக் குறள், பைபிள், கொரான், புத்ததர்மம், ஜெந்தவஸ்தாபோன்ற அருள் நூல் களே, மனித நாகரீகத்தை முன் நடத்துகின்றன. பைபிளும் கொரானு மில்லாத அரபியா கொடிய வனாந்திரமாகவேயிருக்கும்; ஒவ்வொருநாடும் தனது ஆத்ம நூல்களைப் போற்றி நிற்றலே அதன் உன்னதிக்கேற்றவழி; நமது பாரத தேசத்தில் இப்போது அனைவரும் ஏற்றுப்போற்றிப் பயின்று நின்று பயன்பெறக்கூடிய சிறந்த அனுபவ அத்யாத்ம யோகநூல் பகவத் கீதையே. இது அனைவருக்கும் பொதுநூலா யிருக்கவேண்டுமென்றே ஞானி யான தர்மன் சகாதேவனுக்குச் சொல்லாது, அர்ஜுனனுக்குச் சொல்லப் பட்டது.

700 சுலோகங்கள் கொண்ட, இந்தப் பதினெட்டு அத்யாயமுள்ள கீதைக்கு வடமொழி (52, ஹிந்தி (143), வங்காளி (105), மராதி (67), மேவார் (2), நேபாலி (7), குஜராதி (48), உரியா (7), கன்னடம் (19), தெலுங்கு (8), மலையாளம் (2), பஞ்சாபி (2), சிந்தி (7), உர்து (13), பார்ஸி (3), ஆங்கிலம் (103), பிரஞ்சு, இத்தாலி, லத்தீன், ஜெர்மனி ரஷ்யா (18), தமிழ் 11—ஆகச்சுமார் 635—வியாக்கியானங்களும் விரிவுரைகளும் எழுதப் பட்டுள்ளன. எப்புதிய கொள்கையினரும், முதலில் கீதையில் ஆதாரந் தேடி அதற்கு உரைசெய்யத் தொடங்குகின்றனர். இவ்வுரைகளில் முரண் கள் அனந்தம்; வாதவேற்றுமைகள் எண்ணிறந்தன! ஏன்? அதன் நித்ய வுண்மைகளை, யோகத்தால், யோகவாழ்வால், அத்யாத்ம அனுபவத்தால்

சாட்தாத் கரிக்காததே காரணம். இந்த நூற்றாண்டில் கீதைப்பொருளை அத்யாத்மயோக பரிபூரணத்துடன் விளக்கியது பகவான் ஸ்ரீ அரவிந்தரே.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் அலிபூர்சிறையில் யோகம் பயிலும்போது, கண்ணன் ப்ரத்யக்ஷமாகித் தனது ஸர்வான்ம தரிசனத்தைத் தந்து "வாஸுதேவம் இதம் ஸர்வம்" என்பதை நேரே கண்கூடாக விளக்கினார்; இது சத்தியம்! (உத்தர்பாரா ப்ரஸங்கத்தில் இதன் விவரங்காண்க) கண்ணனே அரவிந்தருக்கு கீதையின் உண்மையை, உத்தம ரகஸியத்தை நேர்முகமாகக் காட்டி, அகண்ட பாரதம், சர்வஸமரசமான ஸநாதன இந்து தர்மத்தையும் விளக்கினார். இந்த நூற்றாண்டில் கீ தா யோ க வடிவாக விளங்குபவர் ஸ்ரீ அரவிந்தரே. அவருடைய பூரண யோகயுத்தன் எழுதிய கீதை காட்டும் பாதை சீக்கிரம் வெளிவரும். கீதை உண்மைப்பொருளை ஒவ்வொருவரும் நாடோறும் சிந்தித்து வாழ்வில் மாணிக்கங்களாகப் பத்தொளிரத் தக்கது கண்ணனின் பாஞ்சஜன்யம் இன்று கேட்கிறது! முன்னே கீதையை உரைத்துச்சென்றான்; இன்று அதை நடத்திக்காட்டி கீதாவுலகை, அழகும், அன்பும், அறிவும், வீரமும், சுத்த சுதந்ததிர ஸமத்வப் பொலிவும் சிறக் அமைக்கக் கண்ணன் வந்து விட்டான். உலகெலாம் அவனுடைய ரஸலீலை ஜீவகோபிகைகளெல்லாம் அவனன்பில் ஒரு மயம்! கண்ணன் சச்சிதானந்த அவன் என்றும் நம்மிடையே உள்ளான். அவனுடைய மோகன முரளியு பாஞ்சஜன்யமும் யோகிகளின் உட்செவியில் எப்போதும் ஓங்காரமிடுகி றன! அவனை மாசற்ற அடைக்கலத்துடன் போற்றுமின்!

கண்ணனைப் போற்றிடுவோம்—புதுயுகக்
கண்ணனைப் போற்றிடுவோம்
எண்ணமுஞ் செய்கையும் எல்லாமவனுக்கென்
றீந்து பணிந்திடுவோம்!

---

சென்ற மாத சொற்பிதிர் போட்டியில்
பரிசுபெற்றவர்.

**வை. இராமநாதன்**

(வண்ணை 'இந்து சாதனம்' உதவி பத்ராதிபர்)

சரியான விடை:—

1 சகான, 2. ஏனம், 3. தவில், 4. உத்தி, 5. பிதிர், 6. கியாதி, 7. கபிலை, 8. இரமை, 9. அகாரி, 10. நாசிகை, 11. வனிதை, 12. மாநீலி, 13 தொடுவு, 14. பாவாடை, 15. மாழ்கு, 16. பகடு,

பரிசுப்புத்தகங்கள் அனுப்பப்பட்டுவிட்டன.—பர்.

# ஸ்ரீ த்யாகராஜய்யரவர்களின் சரித்திரம்.

(முன் 60-வது பக்கத்தின் தொடர்ச்சி)

தினந்தோறும் இரவில் தான் சயனித்துக் கொள்ளுமுன் தனது வீட்டிலுள்ள ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் ஸன்னிதானத்தில் பழம், பால், தாம்பூலம், லவங்கம் இவைகளை உபசாரமாக தட்டுகளில்வைத்து 'ஆரகிம்பவே' "விடமுஸேயவே" முதலான கீர்த்தனங்களைப் பாடிதிரையிட்டுவிட்டு பின்பு சயனித்துக்கொள்வார். அதிகாலையி லெழுந்திருந்து திரையைத் திறந்து பார்க்கும்பொழுது முதல்நாள் இரவில் பகவானுக்கு வைத்திருந்த பால், பழம் வைகளிற்பாதியும், தாம்பூலம், லவங்கம் இவைகளை மென்று அங்கு வைத் ருக்குங் காளாஞ்சியில் உமிழ்ந்திருப்பதையுங்கண்டு அவை ஸ்ரீ ராமனால் க்கு அனுக்ரஹிக்கப்பட்ட பிரஸாதமென்று ஆனந்தத்துடன் அதை உட் ண்டு "ராமனீஸமான" "கருணாஸமுத்ர" "மோஹன ராமா" "சேதுலார வனுத" முதலான கீர்த்தனங்களைப் பாடிவிட்டுப் பிறகு நித்ய கர்மானுஷ் னங்களை முடித்துவரப் போவார். ஒவ்வொரு ஏகாதசியிலும் தான் உப ஸமிருந்து இரவில் ஸ்ரீராமனுக்கு உத்ஸவம் நடத்தும்பொழுது "ஸ்ரீபதே" 'நினுவிஞ நாமதிந்து" "நெனருஞ்சினானு" "நகுமோமு" "மரசேவர்டனு" "லோகாவன" முதலான கீர்த்தனங்களைப்பாடி பஜனை செய்வார். ஒவ்வொரு வருஷத்திலும் தமது வீட்டில் ஸ்ரீராமநவமி உத்ஸவம் நடத்தி விசேஷமாக பிராமண போஜனமுஞ் செய்வித்து வந்தார்.

ஒவ்வொரு ஸமயத்திலும் நூதனமாக த்யாகராஜய்யரவர்கள் பாடுங் கீர்த்தனங்களைக் கேட்டு ஆனந்திக்க கணக்கிடக்கூடாத ஜனங்கள் வந்து குவிந்து கொண்டேயிருந்தார்கள். ஓர் நாள் இரவில் த்யாகராஜய்யரவர்கள் தனது சிஷ்யர்களுடன் பஜனை செய்துகொண்டிருக்கும் பொழுது ஐயரவர் களுக்குச் சிறிது போலி அகங்கார மாத்திரம் யிருப்பதாக பகவான் திருவுள் ளததில் நினைத்து அவைகூட தன் பக்தனிடமில்லாமற் போகும்படி செய்வ தற்காக ஓர் வயதுசென்ற பிராமணனுடைய உருக்கொண்டு ஓர் கையில் ஊன்றுகோலுடன் தளர்ந்து தடுமாறி அங்குள்ள ஜனக்கூட்டத்தின் மத்தியில் வந்து உட்கார்ந்தார். அப்பொழுது த்யாகராஜய்யரவர்களும், அவருடைய சிஷ்யர்களும், கீர்த்தனங்களைப் பாடி ஆனந்த பரவசராக பஜனை செய்து கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்திற்கப்பால் நாமாவளி சொல்லி வேறு கீர்த்தனம் பாட ஆரம்பிவிக்கும் பொழுது இக்கிழவர் "தம்பூர்ச்ருதி பூராவும் அபஸ்வரமாக யிருக்கிறதே! இப்படிக்குத் தம்பூரில் ச்ருதிகூடச் சேர்க்கத் தெரியாதவரையா பெரிய வித்வான், மஹாபக்தன், ஸங்கீத ஸாஹித்ய வித்தையில் அபாரயோக்கியதை உள்ளவரென்று சொன்னார்கள்! இவ்வாறு அபஸ்வரங்களைக் காதிற்கேட்பதே மஹாபாவம்" என்று எல்லோருங் கேட்கும்

படிக்கு உறக்கச்சொன்னார். இதைக் கேட்டதும் அந்த த்யாகராஜய்யரவர்களின் திருவாக்கிலிருந்துவரும் பகவத் குணானுபவ விஷயங்களையும், தேவகானத்திற்கு ஸமமாகவுள்ள கானத்தையும், செவியாறக்கேட்டு அனுபவித்து மெய்மறந்திருந்த பல ஞானவான்களும், வித்வான்களும், பெரியோர்களும், மனம் பொறுக்காதவர்களாகவும், ஆனால் நமது த்யாகராஜய்யரவர்களை இவ்வாறு சொல்லக்கூடிய புருஷன் இப்பூலோகத்திலு மிருக்கிறானென்று சிலர் ஆச்சரியப்பட்டும், சிலர் கோபங்கொண்டும், சிலர் இக்கிழவரை என்ன செய்யலாமென்று அவரையே பார்த்த வண்ணமாக யோசித்துக்கொண்டும், ஒன்றுமே பதிற் சொல்லத் தோன்றாதவராகி சிறிது நேரம் தியங்கியிருந்தார்கள். அச்சமயம் நிசப்தமாகயிருந்தது.

உடனே த்யாகராஜய்யரவர்கள் தன்னுடைய சிஷ்யரிடமிருந்த தம்பூராவை வாங்கி ச்ருதியை மீட்டி ஸரிதானாவென்று கவனித்துப் பார்த்தார். முற்றிலும் ஸரியாகவே யிருக்கக்கண்டு தன் மனதிலுஞ் சிறிது கோபங்கொண்டு கிழவரை நோக்கி ஸ்வாமீ! இங்கு ஸமீபத்தில் வரலாம் ச்ருதி அபஸ்வரமாகயிருப்பதைத் தாங்கள் ஸரிபண்ணிக் காட்டவேண்டும்! என்று சொல்லவே கிழப்பிராமணன் அங்குள்ள பலர் மேலும் தடுமாறி விழுந்துகொண்டு த்யாகராஜய்யரவர்களுக்கு முன்னாற்போய் உட்கார்ந்து தம்பூரானை கையில் வாங்கி ச்ருதியை கிரமமாகச்சேர்த்தார். ஸாக்ஷாத் பகவானுடை திருக்கரத்தால் ஓர் வாத்தியத்திற்கு நாதம் உண்டாக்குவதென்றால் அதை புகழத்தரமோ? அந்த ச்ருதியின் ஸுஸ்வர நாதம் த்யாகராஜய்யரவர்களுள்ப அங்குள்ள பலர் காதுகளினுள்ளும் நுழையவே ஆனந்த பரவசராகி மெ மறந்து விட்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் தங்களுக்கு பிரக்ஞை வந்து கிழப்பிராமணரைப் பார்க்கவே அவர் அங்கில்லை. உடன் அந்தர்த்தானமாகிவிட்டனர். அங்குள்ள பலரும்வெளியில் பல யிடங்களிற் போய்த் தேடியுங் கண்டுபிடிக்கக்கூடாமல் த்யாகராஜய்யரவர்கள் இவர் பகவானாகவே யிருக்கவேண்டும் என்னிடமுள்ள அகங்காரத்தைப் போக்கும் பொருட்டு இவ்வாறு தமது கருணையால் என்னை கர்வபங்கஞ் செய்தார். நான் யென்ன படித்தும் பெரியோர்களுடைய புத்தி இன்னும் எனக்குண்டாகாமற் போய் விட்டதே யென்று தன்மனம் வருந்தி "எந்துக்கு பெத்தலவலெ புத்திய்யவு" என்ற கீர்த்தனையைப்பாடி பகவானை துதித்தார்.

பஜனை, உத்ஸவங்கள் நடத்துங்காலங்களில் பல இடையூறுகளைச் செய்துவந்த தமயனார் ஜெப்பேசனென்பவர் தனதிஷ்டர்களான சில துஷ்டர்களுடன்வந்து த்யாகராஜய்யரவர்கள் பூஜைசெய்துவந்த ஸீதாலக்ஷ்மண பரத சத்துருக்ன ஹனுமஸமேதரான ஸ்ரீராமசந்திரமூர்த்தி விக்கிரஹத்தை எடுத்துக்கொண்டுபோய் காவேரி பிரவாஹத்திலெறிந்துவிட்டார். அப்பொழுது த்யாகராஜய்யரவர்களுடைய மனதிற்குண்டான துக்கத்தை யாரால் அளவிடக்கூடும்? பொறுக்கக்கூடாத மனவருத்தத்துடன் "நாயெடவஞ்சன" "மரியாதகாதய்யா" "எந்துதாகினாடோ" "கொனியாடே" "மரிமரிநின்னே" "பட்டிவிடுவராது" "எந்துகுநிர்தய" முதலான அனேக கீர்த்தனங்களைப்பாடி பகவானை பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். சிறிது காலத்திற்குப்பிறகு ஒருநாள் இரவு பகவான் கனவிற்றோன்றி காவேரியில் தானிருக்குமிடத்தைத் தெரிவிக்க, உடன் காவேரிக்குப்போய் அந்த அடையாளப்படிக்கு மணலைத்

# ராஜ கோபாலன்.

(முன் தொடர்ச்சி.)

அதை என்னிடம் சொல்லக்கூடாதா? அதென்ன பக்கத்தில் கடிதம்? ஊரிலிருந்து ஏதாவது துக்க சமாசாரம் வந்ததா?

ராகவன்:—இல்லை! அன்பனே இன்று நான் விழித்தவேளை நன்றாக இல்லை. உன்னிடம் ஒளிக்க என் மனம் வரவில்லை. இன்று நான் இருக்கும் நிலையில் யாரிடமாவது கூறிக்கதறினால் நான் ஒருவாறு ஆறுதல் அடையக்கூடும். நீ சாப்பிட்டுவா பேசிக்கொள்ளலாம்.

சுந்திரம்:—நீ ஒருநாளும் இல்லாத விதமாய்ப் புதுமாதிரியில் விளங்குகின்றாய். சதா குதூகலமாய்ப் பேசும் நீ இவ்விதம் மாறுபட்டிருந்தால் அந்த விஷயத்தை சாதாரணமாக நினைப்பதற்கில்லை. உன் விஷயத்திற்கு பின்னரே என் ஆகாரம்; விவகாரம் யாவும்.

ராகவன்:—சுந்திரம்! என் மனோநிலையை எங்ஙனம் உனக்கு விவ கமுடியும். நீண்டகாலமாக என் மனதை வாட்டிவரும் ஒரு சங்கதியைக் க்குறித்து உன்னிடம் தெரிவிக்க எண்ணினேன். அதிக சங்கோஜம் பட்டபடியால் உன்னிடம் கூறவில்லை. நான் ஒரு மாதரசியைக் காதலிக் றேன். அவள் பொருட்டே நான் வாழ்வதாக இருந்தேன். அடைந் ல் அவளது காதலை அடைவது; இன்றேல் அழிவது என்றும் டிவுகொண்டேன். அம்மடமயிலாள் மங்கை நல்லாள் என்னைக்காதலிக் ன்றாள் எனவும் அறிந்தேன். என் மனோ எண்ணம் உறுதிப்பட அவ் ிளங்குயிலாள் தன் வாயால் "என்னை மணக்கிறேன்" என்ற உறுதி மொழியும் தந்தாள். பின்னுமொருநாள் "என்னைக் கைவிட்டால் என் னப்பிணமாகப் பார்ப்பீர்கள்" எனவும் ஆணையிட்டாள். அவளுக்கு அடிமையானேன். என் இன்பதுன்பங்களுக்கும், எதிர்கால வாழ்க்கைக்கும் அவளே நிலைக்களனாக நின்றாள். அத்தகைய மனங்கவர்ந்த காரிகைக்கு ஏதோ சகிக்கவொண்ணா இடுக்கண் நேர்ந்ததுபோலும். அது இந்தக் கடிதமூலம் தெரிந்தது. அதுவே எனது நிலைக்குக் காரணம்.

சுந்திரம்:—நண்பா, உன் மனோ அதிர்ச்சிக்குக் காரணமான கடிதத்தைக் காணக்கூடுமோ? உன் மனங்கவர்ந்த செல்வியார் எனத்தெரிந்து கொள்ளலாமோ?

உடனே ராகவன் கடிதத்தைக்கொடுக்க சுந்திரம் வாசித்தான். கையொப்பமிட்டிருந்த விஜயம் அவனுக்குத் தெரிந்த பெயராகத்தோன்றியது. சந்தேகத்தை நீக்கிக்கொள்ளக்கருதி "விஜயம் யார்?" என்றான். "உன் அத்தை வீட்டு விஜயமே" என்றான் ராகவன். இதைக்கேட்ட சுந்திரம் திடுக்கிட்டான். ஏனெனில் தான் விஜயத்தைக் காதலித்ததும், அவளிடம் தன் எண்ணத்தை வெளியிட்டகாலத்து அவள் "என் மனம் கொள்ளைகொண்ட மதிவதனன் வேறு ஒருவன் இருக்கிறான்" எனக் கூறியதும், அவன் நினைவிற்கு வந்தன. தன் காதலன் பெயரை அவள் கூற

மறுத்ததும், தன் மனம் சங்கடப்பட்டதையும், அவள் மனமார்ந்த காதலன் ராகவன் என்பதையும் நினைத்து ஆச்சரியப்பட்டான். தன் மனதை சமாளித்துக்கொண்டு சுந்திரன் ராகவனைப் பார்த்து "நண்பனே கவலையைவிடு; என் அத்தை வீட்டு விஜயத்தைக் காதலிப்பது கண்டு நான் பெருமை அடைகின்றேன். என்றும் இது விஷயத்தில் என்னால் ஆன உதவி செய்யத்தவறேன். உன்னை மனதார அவள் காதலிக்கின்றாள் என்பதை அவள் வாய் மூலமே அறிந்தேன்." என்று தன் கதையை சவிஸ்தாரமாக நவின்றான்.

"சுந்திரம்! இந்தக் கடிதத்தினால் உனக்கு என்ன விளங்குகிறது?" என்றான்.

"விளங்குவதென்ன? விஜயத்தை ராமுவுக்கு மணம்புரிவதென தங்கம்மாளின் ஏற்பாடு. விஜயத்திற்கு அதில் சம்மதமில்லை. அதுவிஷயமாக பேச்சுவார்த்தை நடந்திருக்கலாம். அதன் காரணமாக இக்கடிதம் எழுதப்பட்டிருக்கலாம்!" என்றான் சுந்திரம்.

"எப்படி இருப்பினும் இன்று இரவு மெயிலில் நான் புறப்பட்டுச் செல்கிறேன்." என ராகவன்கூற சுந்திரம் தானும் வருவதாகக்கூற இருவரும் மாலையில் புறப்படும் போட்மெயிலில் ஏறிக் காலையில் லாலுகுடி அடைந்தனர். மாலை ஐந்து மணிக்குத் தன் காதலியை சந்திக்கச் சென்றான். அவர் மார்பு படபடவென அடித்துக்கொண்டது. ஏதோ தீங்கு வரப்போவது போல் தோன்றியது. மனதைத் திடப்படுத்திக்கொண்டு காதலியின் தோட்டத்தை அடைந்தான்.

மாலை வெயிலின் தோற்றமும், செடிகொடிகளின் செழிப்பான வளர்ச்சியும், புஷ்பங்களின் நறுமணமும் தோட்டத்தின் அழகை பன்மடங்கு சிறப்பாகக் காட்டியது. சரிகைப்பூக்கள் நிறைந்த நீலப்பட்டாடை துலங்க, அரையில் தரித்த ஒட்டியாணத்தின் வைரமுகப்பு 'பளீர்' என்று கண்ணைப் பறிக்க, அன்ன நடையென நடந்து வந்து தோட்டத்தின் கோடியில் விஜயம் தன் காதலனை வரவேற்றாள். அவளது அழகிய வதனம் மேகத்திடை நின்ற சந்திரன் எனத்திகழ்ந்தது. அவள் கண்கள் சிவந்துள்ள பான்மையிலிருந்து அவள் நெடுநேரம் அழுதிருக்கவேண்டும் என்பதைக் குறிப்பித்தன. பயந்த தன்மையில் நடுங்கிய குரல்கொண்டு தன் இனிய வாய் திறந்து அவள் பேசியதைக்கண்டு, அவன் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினான். அவன் கண்களில் கண்ணீர் பெருகியது.

"கண்ணே! இத்தகைய கடிதம் ஒன்றை நான் உன்னிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. அது என்னைக்கொலைசெய்யும் கொடிய ஆயுதமென இருந்தது" என்றான்

"ஆம்! எவ்விதம் எதிர்பார்க்கமுடியும்? எதிர்பாராத காரியங்கள் இவ்வுலகில் நிகழ்வது இக்காலத்தில் ஆச்சரியமே அல்ல" எனச் சிரித்தபடி புகன்றாள்.

அவளது வெறுப்பான சிரிப்பு ராகவனுக்கு ஒரு விதமான பயத்தை அளித்தது.

"இன்பமே! நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை. விபரமாய்க் கூறு" என்றான்.

"கூறுவதென்ன? நான் ராமுவையே மணக்கவேண்டுமென தங்கம்மாள் வற்புறுத்துகின்றாள். இக்கொடிய வலையிலிருந்து விடுபடும்வழி அறியேன். கூடிய சீக்கிரம் விவாஹம் நடத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. வேறு யெனக்குக் கதியில்லையா? பிறந்தது முதல் நான் பட்ட துன்பங்களை யாரிடம் கூறிப்புலம்புவேன். ஈசா! என் வாழ் நாள் பாழ்பட்டுப் போக வேண்டுமென்பது உனது திருவுள்ளமோ" எனக்கூறி முகத்தில் அடித்துக் கொண்டாள் விஜயம்.

"கண்மணி! ஏன் சும்மா பிதற்றுகின்றாய்? என்னுடன் புறப்படு சென்னை போகலாம். நீ அனாதை யென்று கூறினால் என் மனம் பிளக்கின்றது. புண்ணாகின்றது" என மொழிந்தான் ராகவன்.

"நான் வருவது ஒழுங்கல்ல; உலக அபவாதத்திற்கு நான் பயப்படுகிறேன். ஆடவர் பெண் சமூகத்துக்கு இழைத்த தீங்கோ இது" எனச் சீறி கர்ஜித்தாள் விஜயம்.

அந்தக் கோபச்சொற்கள் சாபம் தருவதுபோலிருந்தன. ராகவன் தலை கிறுகிறுத்தது. விஜயத்தின் இருகரங்களையும் அவன் இருகப்பிடித்தான். "கண்ணே! இப்பாவிக்கு விடை கொடு. இதுதான் கடைசி சந்திப்பு. உலகை வெறுத்த என்னை ஞாபகத்திலேனும் கொண்டு வாழ்" என்றான். "நான் ராமுவை மணக்கமாட்டேன். தற்கொலை செய்து கொள்ளப்போகிறேன். இவ்வுலகில் நான் உயிருடன்வாழ்வது தகுதியன்று" என்றாள் விஜயம்.

"பெண்ணே! அது பேடிகளின் செயல். பாரதப்பெண்கள் செய்கையா அது?" என்றான்.

"கருத்தொருமித்த காதலனை மணவாது, அவனை மறந்து பிறிதொருவனுக்கு மாலையிடுவதுதான் பாரதப்பெண்கள் செயல்போலும்" என பதில் கூறினாள் நங்கை.

பதில் கூற வழிஇன்றித் தவித்தான் இராகவன்.

"தயவுசெய்து தொந்திரவு செய்யாதீர். உயிர் ஒன்றை நாட, உடல் ஒதுக்கி இருப்பது நியாயமல்ல. அடியாள் பாவி; பிறந்தது முதல் கஷ்டம் தவிற சுகம் என்பதறியேன். தங்களை மணந்து இன்பமெய்தவும் கொடுத்துவையாப் பாவியானேன்." எனக் கதறினாள். ராகவன் அலறினான்.

"நான் போகிறேன். நான் மரணமடைந்தால் அது தர்மரணமென ஞாபகத்தில் வையுங்கள்." என்று அவன் தோளில் அயர்ந்தாள்.

ராகவன் தன் கைக்குட்டையால் அவளது கன்னத்தில் வழிந்த கண்ணீரைத்துடைத்தான்.

"கண்மணி! தற்கொலை செய்து கொள்வதில்லை எனச் சத்தியம் செய்துகொடு. அப்பொழுதே நான் மனோ நிம்மதியடைவேன்" என்

அவளது இரு கரங்களைப்பிடித்துக்கெஞ்சினன்.

"தயவுசெய்து என்னைத் துன்புறுத்தாதீர். என்னை மறவாதீர். நேரமாயிற்று; போய் வருகிறேன்" என்று கூறி வீடுநோக்கி ஓடினள்.

"ராகவன் சிறிதுநேரம் மௌனமாக அசைவின்றி நின்றான். சிறிது உணர்ச்சிபெற்றவுடன் தோட்டத்தின் வழியே சென்ற ஒற்றையடிப்பாதை வழியாக வீடு திரும்பினன். அதே வினாடியில் ஆங்கிருந்த புதரின் மறைவி லிருந்த ஒருவன் ராகவன் காலை நோக்கித் தன் கைத்துபாக்கியால் சுடவே "ஐயோ" என்ற சத்தத்துடன் கீழே தடால் என்று விழுந்தான்.

* * * * * * *

தோட்டத்தில் மேலே கூறிய சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கும் சமயம் சுந்திரன் தன் நண்பன் ராகவனைத்தேடி வந்திருந்தான். அது சமயம் ராக வனின் தகப்பனர் சுந்தரத்தை வரவேற்று "வா! சுந்திரம்! உன்னைத் தான் காண விரும்பினேன். நல்லவேளையாக நீ வந்து சேர்ந்தாய்" என அன்புடன் கூறினர்.

"என்னிடம் கூறவேண்டிய விஷயம் யாது?" எனக்கேட்டான் சுந்திரம்.

"நமது குழந்தை கமலத்திற்கு வயது பனிரெண்டு ஆகிவிட்டது. நிச்சயம் இவ்வருடம் விவாகம் நடத்திவிடவேண்டும். எனக்குக் கண்ட இடத்தில் அலைந்து வரன் தேட இஷ்டமில்லை. உன்னையே நான் விரும்பி நிற்கிறேன். உனது சம்மதத்தைத் தெரியப்படுத்தவேண்டும்" என்றார் ராகவன் தந்தை. "சாரதா சட்டம் அமுலுக்கு வந்துவிட்டகாலத்தில் நீங் கள் இப்பொழுது விவாகவிஷயத்தைக் குறித்துப்பேசுவதில் பயன் என்ன? சட்டத்தை மீறினல் சிறைவாசமல்லவா கிடைக்கும். இன்னம் இரண்டு வரு ஷம் போகட்டும். பின்னல் பேசிக்கொள்ளலாம்" என்றான் சுந்திரன்.

ராகவன் தந்தை பதில்கூற வழிதெரியாது சற்றுநேரம் பொருத்து "நான் உன்னிஷ்டப்படியே கமலத்திற்கு விவாகம் செய்கிறேன். நீயே மணந்துகொள்கிறாயா?" என்றார். "சரி" என்றான் சுந்திரன். பிறகு நெடுநேரம்வரை ராகவன் வராததால் சுந்திரன் அவனைத்தேடி விஜயத்தின் தோட்டத்திற்குப் போயிருப்பான் என்று கருதி அங்கு வந்து தோட்டத்தில் மூர்ச்சையுடன் தரையில் கிடக்கும் இராகவனைக்கண்டான். திடுக்கிட்டு அவன்ஸ்மரணை இன்றி இருப்பதைக்கண்டு அவனைத்தோளில் தூக்கிக்கொண்டு வீட்டில் கொண்டுவந்து கிடத்தி சிறிதுநேரம் விசிறினன். சற்றுப்பொறுத்து, அவனுக்குச் சிறிது நினைவு வந்தவுடன் "அடடா காலை அனியாயமாய் வலிக்கிறதே" என்றான். அதற்குப்பிறகு சுந்திரன் அவன் காலைப்பார்க்க குதிகாலின் சதை பிய்த்துக்கொண்டிருந்ததுடன் இரத்தம் தோய்ந்து வழி ந்து காய்திருந்தது. உடனே அதற்குவேண்டிய சிகிச்சைகள் செய்யப்பட் டன. இரண்டு நாட்கள் கழிய, தன்னைத் தோட்டத்தில் யாரோ புத ரின் மறைவிலிருந்து சுட்டதையும், ஆள் யாரென்று அறியமுடியாமல் போனதையும் இராகவன் சுந்தரத்திடம் கூறி வருத்தமுற்றான். இடையே இராகவனின் தந்தை கமலத்தை மணஞ்செய்துகொள்ள சுந்திரம் சம்மதித் ததை இராகவனிடம் கூற அவன் அளவுகடந்த மகிழ்ச்சிகொண்டான். தன்

காதலன் தப்பிப்பிழைத்ததற்கு நன்றி பாராட்டி இறைவனைத் துதித்தாள் விஜயம்.

* * * * * * * *

இடையே ஆறுமாதங்கள் சென்றன. சுந்திரமும் இராகவனும் சென்னையில் இருந்து வருகின்றனர். ஒரு நாள் மாலை அவர்கள் கடற்கரையில் மீன் காக்ஷிசாலைக்கு சமீபத்தில் மணலின்மீது உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். நீலநிறங்கொண்ட ஆகாயமும் கடலும் ஒன்றுபட்டுள்ள தோற்றமும், பூரித்துத்தவழ்ந்து, எழுந்து, குதித்துப் பேரிரைச் சல்ப்போட்டுக் கரையினரைத் துரத்தி வெருட்டும் அலைகளின் எழுச்சியும், கவலைகளை மறந்து காற்று வாங்கும் மாந்தர் கூட்டமும், ரேடியோ ஸங்கீதத்தின் ஒலியும் பார்ப்பவர் கண்ணுக்கும் காதுக்கும் இன்பத்தை அளித்தன. ஆயிரக்கணக்கான மனிதர்கள் உற்சாகமாயும், உல்லாசமாயும், பொழுதுபோக்கும் அப்பெரிய வெளியில் இவ்வுலகவாழ்க்கையை வெறுத்த துறவிபோன்று, சந்தோஷமின்றி கடற்கறையில் உட்கார்ந்திருந்தவன் ராகவன் ஒருவனே. அன்று காலை அவன் வைத்தியப் பரீக்ஷையில் முதன்மையாய்த் தேறிய செய்தி வெளிவந்தும் அவன் மனது சந்தோஷப்பட்டதாய்த்தோன்றவில்லை. சற்றுநேரத்திற்கெல்லாம் “என் பரீக்ஷைதான் முடிந்துபோயிற்று. என் நான் இங்கிருக்கவேண்டும். இரவு வண்டியில் ஊருக்குப்போகிறேன்” என்றான் ராகவன். சுந்திரம் தடுத்துப்பேசவில்லை. ஏனெனில் தற்சமயம் ராகவன் விஷயத்தில் எதாகிலும் தடுப்பது கெடுதலுக்கே” என எண்ணி இருந்தான். ராகவன் தனியே ஊர் செல்வது தகுதியன்று என அவனுக்குப் படவே அவனும் புறப்பட ஆயத்தமாக இருவரும் லாலுகுடி அடைந்தனர்.

விஜயத்திற்கு இன்னம் 1 வாரத்தில் விவாகம் என்னும் செய்தி ராகவன் காதில் எட்டவும் அவன் மனம் வெறுத்தான். அவன் வாழ்நாள் அவனுக்கு வெறுப்பாகத்தோன்றியது. அளவுக்கு மிஞ்சிய துக்கம் நெஞ்சைப் பிளந்தது. பரம துஷ்டனான ராமுவுக்கு விஜயம் மாலையிடுவது பேய்க்கு வாழ்க்கைப்படுவதுபோல்த் தோன்றியது. மனம் நிம்மதியாகும்வண்ணம் தன் நண்பன் சுந்தரத்துடன் காவிரியாற்றில் மணலில்ப் போய்ப் படுத்துக் கிடந்தான். சுந்திரன் பற்பலவாறு தேறுதல் கூறிக்கொண்டிருந்தான்.

இருவரும் வீட்டுக்குச்செல்லவேண்டுமே என்பதையும் மறந்து இரவு 11-மணிவரை மணலிலேயே படுத்துக்கொண்டிருந்தனர். அது சமயம் திடீரென ஒரு குரல்:— இனிய குரல் — ஆ! பெண்ணின் குரல்போலன்றோ உள்ளது. இந்நிசியில யாராயிருக்கலாம? என இருவரும் ஆலோசித்துக்கொண்டிருக்கையில், அந்த மந்தமான நிலவில் “காவிரித்தாயே! என்னை யேற்றுக்கொள். பாவி படும்பாடுபோதும்.” என கூறிக்கொண்டே திடீரென்று ஆற்றில் விழுந்துவிட்டாள். இதைக்கண்ட இருவரும் உடல் பதைக்க அத்திசையை நோக்கி ஓடினர். ராகவன் அந்த இடத்தில் தடாலென்று குதித்துதேடி, அக்கொடிய ஆழமுள்ள பிரதேசத்தில் அப்பெண்ணின் கூந்தலைப்பற்றிப்பிடித்து மிக்க சிரமத்தோடு கரை சேர்ந்தான். உணர்ச்சியற்றுக் கிடக்கும் அப்பெண்ணுக்கு உடனே மருந்து கொடுக்க வேண்டுமெனக்கருதிய ராகவன் “சுந்திரம்! ஓடிப்போய் ஒரு வண்டி கொண்டுவா” என்றான். சுந்திரன் 5 நிமிஷத்தில் வண்டியுடன் வர, அப்பெண்ணை வண்டியில் ஏற்றி ஆசுபத்திரியில் சேர்த்துப்படுக்கையில் கிடத்தி

வைத்திய உதவிகள் செய்தனர். இடையே சுந்திரம் அப்பெண் யாரெனக் கருதி உற்றுப்பார்க்க "அடடா! விஜயமல்லவா?" என்று கத்த ராகவன் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணத்தொடங்கியது. அவள் தற் கொலை செய்து கொள்ளவே ஆற்றுக்கு வந்தாள் என்பது அவர்களுக்கு நன்ருகவிளங்கியது.

தகுந்த மருந்துகள் செலுத்த அவளுக்குக் கொஞ்சம் உணர்வு வந்தது. அவளது சரீரம் நிரம்பவும் பலஹீனமாய் இருந்ததுடன் "ஐயோ" எனக் கத்தினுள். பொழுது புலர்ந்தும் விஜயத்திற்கு ஸ்மரணை வரவில்லை. இடையே ஆற்றில் விழுந்த விஜயம் ஆஸ்பத்திரியில் இருப்பதை சுந்திரத்தின் மூலம் உணர்ந்த தங்கம்மாள், மனங்கலங்கியவளாய் சுந்திரத்துடன் வந்துசேர்ந்தாள். பெரிய டாக்டர்கள் ராகவனுடன் சம்பாஷித்துக்கொண்டே நைநாடி பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டு அவள் "ராகவா! குழந்தைக்கு எப்படி இருக்கிறது?" என்ருள். "அம்மா! ஹிருதயம் பலஹீனப்பட்டிருக்கிறது; பிழைத்தால் நல்லகாலம் என்றே கூறலாம். ஈசுரகிருபை வேண்டும்." என்ருன். அவனது கண்களில் அது சமயம் கண்ணீர் பெருகியது.

தங்கம்மாள்:— உன்னுல்த்தான் அவள் பிழைத்தாள். நீதான் காப்ற்றவேண்டும்.

ராகவன்:— என்னுல் என்ன முடியும்? அவனன்றி ஓர் அணுவும் அசையாது. அனைத்தும் அவன் திருவுள்ளம்.

இடையே தங்கம்மாள் வீட்டுக்குப்போய் கொஞ்சம் ஆகாரம் கொண்டு வரச்சொன்னுள். அதுசமயம் விஜயத்திற்கு ஸ்மரணை வந்தது. இரு கண்களையும் திறந்து நான்கு புறமும் நோக்கினுள் "நான் எங்கே இருக்கிறேன்" என மெல்லிய நால் அவள் வாயிலிருந்து புறப்பட்டது "பெண்ணே! நீ ஆஸ்பத்திரியில் இருக்கிருய் நான் யாரெனத்தெரியவில்லையா?" என்ருன் ராகவன்.

தான் காவிரியில் விழுந்ததும். அங்கிருந்துதான் மீட்கப்பட்டிருப்பதும் தன்னை இத்தகைய விபத்திலிருந்து தப்புவித்தவன் தனது காதலனே என்பதும் அவளுக்கு நன்ருகவிளங்கியது.

"எனக்கு என் துன்பங்கொடுக்கின்றீர்கள்? என்னை விடுவிக்க வென்று சென்னையிலிருந்து வந்தீர்கள்? பாவிக்கு சதாயுஸ் என்பது என் விஷயத்தில் சரியாகப்போய்விட்டதே" என மொழிந்தாள்.

"அது ஈசன்செயல். அதுசமயம் நான் ஆற்றில் இருக்கநேர்ந்தது தெய்வ யத்தினமேயாகும்" என்ருன் ராகவன்.

"அடுத்தவாரம் என் விவாஹம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. என் வாழ்நாள் துன்பகரமாகப்போவதை நான் விரும்பவில்லை. அதனுலேயே நான் ஆற்றில் விழத்துணிந்தேன். இந்நிலையில் என்னை விடுவிப்பதில் உங்களுக்கு யாதுபலன்?" என நவின்ருள் நங்கை.

"என் என்னை மணக்கிறேன் என்பதாகத் தங்கம்மாளிடம் சொல் என்னசொல்கிருள் பார்ப்போம்." என்ருன்.

"ஒருநாள் நான் அதைக்கூறிவிட்டுப் பட்டபாடு பரமனுக்கே தெரியும் ராமுவுக்கு என்னகுறைவு? ரூ. 100 சம்பளமுள்ள வேலை சேலத்தில் அவனுக்குக்கிடைத்திருக்கிறது. உனக்கென்ன வலிக்கிறதோ" என்று கூறித் திட்டினான். இனிதற்கொலை செய்துகொள்வதே தகுதியெனக்கருதி இங்ஙனம் செய்தேன்" என்றாள். ராகவன் மனம் குழம்பியது. இன்னது சொல்வதென்பது தெரியாது தத்தளித்தான். "பெண்ணே! போனது போகட்டும் நீ அதற்காகக்கவலைப்படாதே! விதியின்படி நடக்கட்டும்" எனக்கூறி அவளது செவ்விய இதழ்களில் ஒரு முத்தம் ஈந்தான்.

"என் வாழ்நாள் துன்பத்துடன் செல்லவேண்டுமாயின் அதன்படியே நடந்துதீரும். யாவும் விதியின்படியே. என் உயிர் உங்களுடன் வசிக்கும். இவ்வுடல் யாருக்கோ அர்ப்பணம். அடியாள் யாதாகிலும் ஓர் உதவிகோரும் காலத்து, என்னை மறவாது வந்து காப்பாற்றவேண்டும்" என்றாள். "என் உயிர் துறந்தேனும் உன் வேண்டுகோளை நிறைவேற்றுவேன் இது சத்தியம்." என்று கூறி "கண்மணி—

இன்னம் பிறவியுண்டு மாதசே இன்பமுண்டு
நின்னுடன்வாழ்வேன், இனிவரும் பிறப்பினிலே" — (பாரதி)

என்ற பாட்டைப்பாடிப் புலம்பினான். காதலர் துயரம் சகிக்கமுடியாதவண்ணம் இருந்தது.

இது சமயம் தங்கம்மாள் வரவே இவர்கள் பேச்சு முடிவடைந்தது. இரண்டு தினங்களில் விஜயம் சரியான நிலையை அடைந்தாள். தங்கம்மாளும் அவளை வீட்டுக்குக் கூட்டிச்சென்றாள்.

* * * * * *

தங்கம்மாள் வீட்டில் விவாக ஆரவாரம். உறவினர் கூட்டமும், உற்றார் வருகையும் பிரதானம். தன்னை சிங்காரித்துக்கொண்டு அளவு கடந்த பெருமையுடன் ராமசுவாமி மணப்பந்தலில் வீற்றிருக்கின்றான். விஜயம் மனோநிலை விவரிக்கமுடியாதவண்ணம் இருந்தது. தன் காதலன் பாடிய பாரதியின் பாட்டை அவள் மனதில் பாடிக்கொண்டிருந்தாள். அவள் வீட்டைவிட்டுச் செல்லாமல் தங்கம்மாள் அவளை ஒரு அறையில் பூட்டிவைத்தாளாதலின் முகூர்த்த சமயத்தில் அவள் மணப்பந்தலுக்கு அழைத்து வரப்பட்டாள். காளி கோயிலுக்கு இழுத்துவரப்படும் ஆடுபோல் அவள் நடை இருந்தது. அத்தகைய நிலையில் ராமு விஜயத்திற்கு மணமாலை சூட்டினான். நான்கு நாளும் சம்பிரமமாக விருந்தினராக இருந்து உண்ட உற்றார் உறவினர் சாப்பாட்டை குற்றம்கூறி சண்டை இட்டுச்சென்றனர். ராமு தன் மனைவியுடனும், தாயுடனும் சேலம் சேர்ந்தான்.

* * * * * * *

ராகவன் மனப்பிரமைகொண்டு சுந்திரத்துடன் சென்னை அடைந்து அங்கு ஓர் வைத்தியசாலை ஸ்தாபித்தான். அவனது கூறிய அறிவும் அவன் ஏழைகள் மீதுகொண்ட இரக்கமும், அவனை நல்லநிலைக்குக் கொண்டுவந்து சேர்த்தன. பிரபலமான பெயருடன் விளங்கிய அவனைச் சென்னையில் அறியாதார் ஒருவரும் இலர். இதற்கிடையில் கமலத்திற்கும் சுந்திரத்திற்கும் விவாகம் நடைபெற்றது. சுந்திரம் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருக்கிறான். சுந்திரத்தின் விவாகத்திற்கு ராமு தன் மனைவி விஜயத்துடன் வந்திருந்தான். தன் பழங்காதலன் நிலையைக்கண்டு கண்ணீர் பெருக்கினாள் விஜயம். ராகவனை

விவாகம் செய்துகொள்ள அவன் தாய் தந்தையர் துன்புறுத்திப் பார்த்துப் பயன்படாமைகண்டு அவ்வெண்ணத்தைக் கைவிட்டனர். சுந்திரமும், கமலமும் தொல்லைப்படுத்தி ஓய்ந்துபோனார்கள். இத்துக்கம் காணச்சகியாது ராகவனின் தாய் தேகவியோகமடைந்தாள். ஏராளமான வருவாய் சம்பாதித்து தர்மத்திற்கு வாரி இறைத்து ஏழைகள் பங்காளனாய் ராகவன் விளங்கினான். அவனது கீர்த்தி எங்கும் வியாபித்தது.

* * * * * * *

போலீஸ் கச்சேரியில் நமது சுந்திரம் அன்று வந்த தபால்களைப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். அதில் ஒரு கடிதம் சேலத்திலிருந்து ராமு எழுதியதாகும். அது வருமாறு:—

அன்புள்ள சுந்திரம்:—

உன்னைக்கண்டு இரண்டு ஆண்டுகள் ஆயின. நான் மோட்டார் வியாபாரம் செய்வது உனக்குத்தெரியும். சமீபத்தில் அதன் வியாபார விஷயமாக நான் ஒரு கஷ்டத்தில் மாட்டிக்கொண்டேன். நான் இன்னம் 15–தினங்களில் ரூ. 7000-ம் செலுத்திவிடவேண்டும். இல்லாவிடில் என் தலை தப்புவது அரிது அல்லது சென்னை போலீஸ் கமிஷனர் மனது வைத்தால் விடுபடலாம். நீ போலீஸ் கமிஷனருக்கு சிபாரிசு செய்வாயென்று நம்புகிறேன். உனது அரிய உதவி எனக்குத்தேவை.

உன் பதிலை எதிர்பார்க்கும்,
ராமஸ்வாமி, சேலம்.

இக்கடிதத்திற்கு பின்வருமாறு சுந்திரம் பதில் அளித்தார்.

அன்புள்ள ராமு,

உன் கடிதம் கண்டேன். உறவின்முறை ஒன்றுதவிற உனக்கும் எனக்கும் வேறுவித பந்தமில்லை. எனது ஆருயிர் நண்பனும், என் மனைவி கமலத்தின் சகோதரனுமான ராகவனைத் தோட்டத்தில் சுட்டது நீ என உன் விவாகத்திற்கு வந்த சமயம் உனது டயரி (Dairy) மூலம் நான் அறிந்துகொண்டேன். இன்று வரை இது விஷயத்தை நான் யாரிடமும் கூறவில்லை. உன் செய்கைக்கு இறைவன் கூலி கொடுக்கவேண்டுமென நினைத்தேன். இத்தகைய காரியத்தைச் செய்ததுடன் நில்லாது நீ ஒன்றும் அறியாதவன்போல் பாசாங்கு செய்தது எனக்கு ஆத்திரத்தை உண்டாக்குகின்றது. என்மேலதிகாரியிடம் கேஸ்விஷயமாக நான் பேசுவது கூடாது, அது எனக்கே ஆபத்து. அத்தகைய வழிகளுக்கு நான் செல்லமாட்டேன். உன்னை விடுவிக்க என்னிடம் 7000 ரூபாய் இல்லை.

பிரியமுள்ள,
சுந்திரம், சென்னை.

ஆவலுடன் தபாலாபீஸில் கடிதத்தை எதிர்பார்த்து ஏங்கினான் ராமு. அவனுக்கு இன்னது செய்வது எனத்தோன்றவில்லை. தான் செய்த காரியம் சுந்திரத்திற்குத் தெரிந்துபோனதற்கு மிகவும் வருந்தினான். இதுவிஷயம் டாக்டர் ராகவனுக்குத்தெரிந்துபோகுமோ என அஞ்சினான். தன்னுடைய பேராபத்திலிருந்து தன் மனைவி விஜயத்தைத்தவிற வேறு வழியில்லை என்பதை உணர்ந்தான். எவ்விதம் தாலிகட்டிய கணவனைக் கைவிட முடியும்? விஜயம் கணவனுக்குப் பரிந்து பின் வரும் கடிதத்தை ராகவனுக்கு எழுதினாள். (தொடரும்)

# இலட்சுமி கடாட்சம்.

அல்லது

## மங்களதீபத்தின் மகிமை.

( கதை விநோதன். )

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் —ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க்கென்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான். —நல்வழி.

**வா**சகர்களே! அந்தி மயங்கியதும், இந்து ஸ்திரீகள் பக்தியோடு திருவிளக்கேற்றி நமஸ்காரம் செய்வதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களல்லவா? அவர்கள் ஏன் அவ்வாறு செய்கிறார்கள்? மங்கள தீபத்தைப்போற்றும் மங்கையர் வாழும் குடும்பத்திற்கு ஒரு குறைவும் ஏற்படுவதில்லையென்பதும் இலட்சுமிதேவியின் கடாட்சம் ஏற்படும் என்பதும் நம்மவர் நம்பிக்கை.

சாயங்காலம், இலட்சுமி வரும் வேளையென்றும், அப்பொழுது திருவிளக்கேற்றித் தெய்வம் தொழுவது தீபமங்கள ஜோதியாகிய இலட்சுமி தேவியைத் தொழுவதே யாகும் என்றும் நமது முன்னோர் நம்பி வந்தனர். மலர்ந்த செந்தாமரையில் இலட்சுமிதேவியைத் தரிசித்தவர்கள், புதிய செந்தாமரைபோலப் பொலியும் பொன்விளக்கின் ஜோதியிலும் அத்தேவியின் பொன்மேனியையும் சுடர்முகத்தையும் கண்டார்கள் என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. மோகனமான மாலைப்பொழுதில், மகாலட்சுமி வருவதாகக் கருதி மங்கள தீபத்தை ஏற்றித் தெய்வம் தொழுவது, ஓர் அழகிய பழைய வழக்கமாகும். மங்கள தீபத்தின் மகிமையால், இலட்சுமி-கடாட்சம் பெற்றதைக் குறித்து ஓர் அழகிய குட்டிக்கதையொன்று வழங்கி வருகிறது. அக்கதை வருமாறு:—

புஷ்பபுரியென்னும் புராதன நகரமொன்றில், தனடாலர் என்ற ஒரு செட்டியார் இருந்தார். அவர் பெரிய பணக்காரர். அவருக்குச் சீராளன் என்ற ஓர் செல்வமகன் இருந்தான். அவனுடைய மனைவியான சுந்தரவல்லி அழகில் சிறந்து விளங்கியதுபோல் நற்குண நற்செய்கைகளிலும் சிறந்து விளங்கினாள். அவர்கள் பல வருஷங்களாக இன்ப வாழ்வு வாழ்ந்துவந்தனர்.

இப்படி வாழ்ந்துவருகையில், ஒரு காலத்தில் திடீரென்று கொடும் பஞ்சம் ஏற்பட்டது. நாட்டு மக்களும், நகர மக்களும் பஞ்சத்தால் வருந்திக் கதறுவாயினர். ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாகக் கழிந்தது. ஜனங்கள் அனைவரும், பெருங் கவலையோடு, “ஐயோ! இன்னும் எத்தனைநாள் நாம் இந்தக்கஷ்டம் அனுபவிக்கவேண்டுமோ? எப்பொழுது இலட்சுமி கண்திறந்து பார்ப்பாளோ?” என்று இரங்கி ஏங்கினர்.

இப்பஞ்சத்தால் தனபாலரும், சீராளனும் மற்றவர்களைப்போலவே ஏழைகளாகி வருந்திக்கொண்டிருந்தனர். சுந்திரவல்லி மாத்திரம் இலட்சுமி தேவியின்மீது வழக்கம்போல் பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தாள்.

ஒருநாள் வெள்ளிக்கிழமை மாலை, அவ்வூரார், பஞ்சத்தின் கொடுமையால், மனம் நொந்து இலட்சுமிதேவியைக் கண்ணற்றவளென்று நிந்தனை செய்துவிட்டு, இனி ஒருவர் வீட்டிலும் திருவிளக்கேற்றுதல் வேண்டாம்; தெய்வம்! தெய்வம்! — என்று காசைக் கரியாக்குவதில் பயனொன்றுமில்லை என்று தீர்மானித்துக் கொண்டனர். இத் தீர்மானத்தை அனுசரித்து, அவர்கள் அந்தி மயங்குவதற்கு முன்னரே வாயிற்கதவுகளை தாளிட்டுக்கொண்டு, உள்ளே தீபம் ஏற்றாது மூலையிலிருந்து முணுமுணுத்துக்கொண்டிருந்தனர்.

ஆனால் அன்று சுந்திரவல்லிமாத்திரம், வழக்கம்போல் வாயிற்கதவை அடையாது திரியும் நெய்யும் வாங்கித் திருவிளக்கேற்றிவைத்தாள். பிறகு அவள் முகமலர்ச்சியோடு தன் புருஷனை வணங்கி நோக்கி, "தாங்கள் வாசவிலுள்ள திண்ணையில் உட்கார்ந்திருங்கள்; யாராவது உள்ளே வந்தால் எங்கே போகிறீர்கள்? என்று கேளுங்கள். உள்ளே போகிறோம்' என், றால் இனி வெளியே போகாமலிருந்தால்தான் உள்ளே செல்லலாம் என்று சொல்லிவிடுங்கள்." என்று வேண்டிக்கொண்டாள்.

அப்பால் அப்பெண்மணி, தன் மாமனாராகிய தனபாலசெட்டியார் கொல்லைவாசற்படியில் காவலிருத்தல் வேண்டுமென்று புருஷனை வேண்டிக்கொண்டாள். யாராவது வெளியே போகிறேனென்றால், இனி உள்ளே மீண்டும் பிரவேசிப்பதில்லையென்று உறுதி கூறினால் வெளியே போகலாம் என்று செட்டியார் அனுமதி கொடுத்தல் வேண்டும்; இல்லாவிட்டால், போகக்கூடாதென்று அவர் மறுத்துவிடுதல் வேண்டும். இவ்வாறு ஏற்பாடு செய்தபின், சுந்தரவல்லி வீட்டிற்குள் விளக்கெதிரே உட்கார்ந்து இலட்சுமியைத் தோத்திரஞ் செய்துகொண்டிருந்தாள்.

அன்று அந்தி மயங்கியதும், ஆகாயமார்க்கமாக வந்த அஷ்டலட்சுமிகளும், அவ்வூரில் ஒரு வீட்டிலாவது விளக்கில்லையென்று கண்டு வருந்தினார்கள். பிறகு அவர்கள் ஆகாயவீதியிலிருந்து 'சரே' லென்று கீழே இறங்கி வந்து ஊரைச் சுற்றிப் பார்த்தார்கள். 'என்ன ஆச்சரியம்! இது தரித்திரம் பிடித்த ஊராயிருக்கிறதே!' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

ஏழை மக்களுக்கு அருள்செய்ய விரும்பிய அவர்கள், கதவு அடைக்கப்பட்டிருந்ததால் வீடுகளுக்குள் செல்ல வழிகாணாது திகைத்துப்போனார்கள். தேடித்தேடி அலுத்துப்போய், அவர்கள் முடிவில் சுந்தரவல்லியின் வீட்டிற்கு அருகே வந்தார்கள். வாசற்கதவு திறந்திருந்து; வீடு முழுமையும் மங்கள தீபம் ஒளி வீசித்திகழ்ந்தது. அடையாத அவ்வாசலில், அஷ்டலட்சுமிகளும் அடங்காத மகிழ்ச்சியோடு நுழையப்போனார்கள்.

அப்பொழுது சீராளன் அப்பெண் தெய்வங்களை வணங்கி, "தாய்மார்களே! நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?"

என்று கேட்டான். "எங்களை அஷ்டலட்சுமிகள் என்று அழைப்பார்கள்' நாங்கள் பொன்னுலகிலிருந்து பூவுலகம் பார்க்கவந்தோம். நாங்கள் இன்று இவ்வூர் முழுமையும் சுற்றி அலைந்தோம். ஒரு வீடும் திறந்திருக்கவில்லை; வீடுகளில் விளக்கும் இல்லை. விளக்கில்லாத வீட்டில் நாங்கள் குடியிருக்க மாட்டோம்; அந்நாள் மூதேவிதான் தங்கியிருப்பாள். அவளுக்கும் எங்களுக்கும் பெரும் பகையுண்டு. இப்பொழுது இந்த வீடு தீபத்தால் ஜ்வலிக்கிறது. எனவே நாங்கள் இங்கு தங்கலாமென்று வந்தோம்'' என்று அந்த தெய்வப்பெண்கள் மறுமொழி கூறினர்கள்.

உடனே சீராளன் சொன்னதை ஒப்புக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள்.

அஷ்டட்ட லட்சுமிகளான சீதேவிகளையும் ஒருங்கேகண்ட மூதேவியக்காள்'இனி நமக்கு இது சரியான இடமன்று' என்று கொல்லை வழியாக ஓட்டம்பிடிக்க முயன்றுள்.

அப்பொழுது அங்கே ஜாக்கிருதையாகக் காத்திருந்த தனபாலர் "யார்? எங்கே போகின்றீர்? இவ்வழியாக போவதாயிருந்தால், மீண்டும் இங்கே வரலாகாது தெரியுமா!'' என்று கேள்விகளை அடுக்கினர். நான் தான் மூதேவியாள், தெரிய வில்லையா?'' என்று மூதேவியாள் நடுங்கிக் கொண்டு சொன்னள்.

பிறகு அவள் "அந்தோ! என்பகையாளிகளான சீதேவிகள் (இலட்சுமிகள்) இங்கு வந்து விட்டார்கள்! நான் இனி ஒருகணமும் குடியிருக்க மாட்டேன். ஒருபொழுதும் இனி இங்கு வருவதுமில்லை'' என்று கதறிக் கொண்டு ஓட்டம் பிடித்தாள்.

அஷ்டலெட்சுமிகளும் அடிவைத்த அன்று முதல் தனபாலரது வீடு மீண்டும் அஷ்ட ஐசுவரியங்களாலும் பொங்கிப்பொலிந்தது. சீராளன் தன் செல்வியான சுந்தரவல்லியின் சூழ்ச்சித்திறமையை வியந்து பாராட்டினர். மாமனும் மருமகளை மனமுவந்து வாழ்த்தினர். குடும்பம் சௌக்கியமாக வாழ்ந்து வந்தது.

இதனல் சாயங்காலம், கொல்லைக்கதவை அடைத்து வாயிற்கதவைத் திறந்துவைத்து, ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் திருவிளக்கேற்றுதல் வேண்டுமென்றும், வெள்ளிக்கிழமை விரதமிருந்து தீபம் ஏற்றித் தெய்வம் தொழுதால், இலட்சுமி-கடாட்சம் உண்டாகும் என்றும் நம் மக்கள் நம்புகிறுர்கள். திருவிளக்கேற்றித் தெய்வம் தொழுங்கள்.

விதிகள்:— 1. விடைகள் பிப்ரவரி-மீ 15-உக்குள் அனுப்பப்படவேண்டும். 2. அன்று விடைகள் பிரித்துப் பார்க்கப்பட்டு, முதலாவது சரியான விடைக்கே பரிசளிக்கப்படும். 3. இதில் ஆசிரியரின் தீர்மானமே முடிவானது. இது விஷயமாக யாதொரு கடிதப்போக்கு வரத்தும் வைத்துக்கொள்ளப் படமாட்டா. 4 விடையுடன் ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 5. வெற்றிபெற்றவரின் பெயர் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும். 6. வெற்றி பெற்றவருக்கு ரூ. 2 மதிப்புள்ள நாவலாவது சங்கீதப்புத்தகமாவது அனுப்பப்படும்.

# சந்திரப்ரபா.

(முன் தொடர்ச்சி)

"ஒன்றும் சொல்லவில்லை. அதற்குள் தாங்களும் வந்துவிட்டீர்கள்."

"என்ன?" வென்று மீண்டும் டாக்டர் பிரபாவை அழைத்துக்கேட்டார்.

"இன்று நான் வழக்கம்போல் என்னறைக்குச் சென்றேன். சென்றதும் வந்த கடிதங்களைப்பார்த்துவிட்டு அவைகளை உள்ளே வைக்கும் பொருட்டு பீரோவைத்திறந்தேன். உள்ளே இருந்த காகிதங்களெல்லாம் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தன. நான் பிரமித்துப்போய் அப்படியே ஒன்றும் தெரியாது நின்றுவிட்டேன். சற்று நேரத்தில் உடலில் தீப்பற்றி விட்டதை யறிந்தேன். கூச்சலிட்டேன். இவர்கள் வந்தார்கள். இவ்வளவே"

"வழக்கமாய், வரும் கடிதங்களை பீரோவில்தான் வைப்பதே" என்றார் டாக்டர்.

"ஆம்."

"தீப்பிடித்ததின் காரணம் ஏதாவது விளங்குகிறதா?"

"இல்லை."

"யாராவது நீ இல்லாத சமயத்தில் பீரோவைத்திறந்து தீ... திருந்தால்?"

"முடியாத காரியம். ஏனெனில் நான் சற்றுமுன்புதான் இங்கிருந்து எல்லாவற்றையும் பூட்டிக்கொண்டு சாவியைக்கொண்டுசென்றேன்."

"ஓகோ சரிதான். சற்றுமுன்பு இங்கு என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"பேப்பர் பார்த்துக்கொண்டிருந்தேன்."

"வேறொன்றும் செய்யவில்லையா?"

"இல்லை"

"நீ இங்கு விட்டுப்போகும்பொழுது பீரோவைத்திறந்து பார்வையிட்டதாக ஞாபகமிருக்கிறதா?"

"நானு? ——— ஆம். திறந்தேன்."

"ஏன்?"

"ஏனு? எங்கே — ஓகோ மறந்துவிட்டேன். என் சிநேகிதை யொருத்தியிடமிருந்து ஓர்கடிதம் வந்தது. அதைப்பிரித்துப்பார்த்தேன் பார்த்துவிட்டு வழக்கம்போல் உள்ளே வைத்துவிட்டேன். அப்பொழு திறந்தேன். அங்கு சமுசயிக்கும்படி ஒன்றும் அப்பொழுதில்லை."

"சரி. பீரோவிற்குள் ஏதேனும் முக்கியமான காகிதங்களாவது சாமான்களாவது வைத்திருந்ததா? ஏனென்றால் அப்படியில்லாத பக்ஷத்தில் இந்த விபத்து நேரிட யாதொருகாரணமு மில்லையல்லவா?"

" அதொன்றும் கிடையாது. என்னிடம் அப்படி இரகசியமான சாமான்களொன்றும் கிடையாது. அப்படி ஏதாவது முக்கியமான பொருள் என்று கூறவேண்டுமென்றால் என்னுடைய நண்பர்கள் சிலரின் போட்டோக்கள் இருந்தன. அவ்வளவே."

" ஓகோ சரிதான். எங்கே அந்தப் பீரோவைப்பார்வையிடலாம்" என்று பாபுவை யழைத்துக்கொண்டு பக்கத்து ரூமிற்கு டாக்டர் சென்றார்.

" ஏதேது! கேள்விகளெல்லாம் வெகுபலமா யிருக்கிறார்போலிருக்கிறதே."

" அதொன்றுமில்லை. கேட்கவேண்டுமென்று எனக்கு ஓர் அவாவிருந்தது. அதை நிவிர்த்திசெய்துகொண்டேன் அவ்வளவே."

" என்னென்ன தெரிந்துகொண்டீர்?"

" நீரென்ன தெரிந்துகொண்டீரோ அதைவிட ஓர் அணுவும் நான் அதிகமாகத் தெரிந்துகொள்ளவில்லை என்று நிச்சயமாகக்கூறுவேன்.

" அதென்னமோ இதெனக்கு ஆச்சரியமாகவே தோன்றுகிறது."

" ஆம். எனக்கு மப்படியே தோன்றுகிறது."

" சாதாரணமாக என் வீட்டிற்கு யாரும் வரமாட்டார்கள்; அப்படி வந்தாலும் எங்களுக்குத்தெரியாமல் இங்கு அடைவது துலபம். அதுவும் [illegible]ரோவைத்திறந்து தீவைப்பதென்றால் எனக்கு மிகவும் அற்புதமாகவே [illegible]ன்றுகின்றது."

" இதன் காரணம் தங்களுக்கேதாவது தென்படுகிறதா?"

" காரணமென்ன? ஒன்றும் தோன்றவில்லை. பி[illegible]பாவும் தனக்கொன்றும் விளங்கவில்லை யென்கிறாள். அதெப்படியேனும் போகட்டும், அவள் உயிறுக்குச் சற்றேனும் அபாயமில்லையே?"

" கொஞ்சமும் அபாயம் கிடையாது."

" இந்த சமாசாரம், அதாவது பீரோ தீப்பிடித்த விபரம் எனக்கு மிகவும் தொந்திரை செய்கிறது. இதன் விபரத்தை நான் கண்டுபிடித்தாலொழிய எனக்கு மனம் நிம்மதியடையாது."

" இருக்கலாம். இந்த விஷயம் மனதிற்கு அதிகமான பரபரப்பை யுண்டாக்காவிட்டாலும், ஏதோ மர்மமாகத்தானிருக்கிறது."

" இதைக்கண்டுபிடிக்கும் விஷயத்தில் தாங்கள் எனக்குப் பூரண உதவி யளிப்பீர்களென்று நம்புகிறேன். அதாவது எனக்குவேண்டிய விபரங்களை யளிக்கவும், தங்களை யடிக்கடி பார்க்க அனுமதியும் வேண்டுகிறேன்." என்றார் டாக்டர்.

" ஆகா! வெகு தாராளமாக."

[illegible]ன்று பேசிக்கொண்டு வருகையில் பாபு, டாக்டரை விளித்து " இதுதான் [illegible]ந்த பீரோ" வென்றார்.

பீரோ சுமார் 4-அடி உயரமிக்கலாம். அது இரும்பினால் செய்யப்பட்டது. பலமான பூட்டுத்திரப்புள்ளது. திட்டமாக கள்ளச்சாவி பிரயோஜனப்படாது என்று பாபு சொல்லுகிறார். கதவைத்திறந்ததும் உள்ளே கருகி,

சாம்பலாகிக் கிடந்த காகிதங்கள் இருந்தன. டாக்டர் அவைகளை கூர்ந்து கவனித்துக்கொண்டே யிருக்கையில் அவர், வேட்டை நாய்போல் மூக்கினல் அடிக்கடி முகர்ந்து பார்த்தார். ஏதோ தனக்குத் தெரிந்த வாடைபோலுமிருந்தது. ஆனல் திட்டமாகவும் அவரால் சொல்லக்கூடவில்லை. இந்த நிலைமையில் பாபு.

“ என்ன தெரிகிறது ?” என்ருர்.

“ என்னவா ? ஒன்றுமில்லை.” என்று சொல்லிக்கொண்டே சுற்று முற்றும் பார்த்தார். எங்கிருந்தேனும், ஒரேவழியைத்தவிர வேறு வருவதற்கு மார்க்கத்தைக்காணேம். ஆச்சரியப்பட்டுக்கொண்டே திரும்புகையில் உபயோகமற்ற காகிதங்களைப்போடும் பெட்டியைக்கண்டார். வெகுநேரம் அதை உற்று நோக்கிய பிறகு, சடக்கென்று கீழேகுனிந்து சில கவர்களை எடுத்துக்கொண்டார். அதாவது அவைதான் அன்று தபாலில் வந்தவை. கடிதங்களை எடுத்துக்கொண்டு உபயோகமற்ற கவர்களை யந்தக் கூடையில் போடுவது வழக்கம். அதைக்கண்ட பாபு “ அதென்ன ? ஒகோ !” என்று சொல்லிவிட்டு, மீண்டும் இருவரும் பிரபாவிருக்கும் அறையைநோக்கி நடக்கலாயினர். அவண் அடைந்ததும் டார்க்டர் தான் கொண்டுவந்த கவர்களை யவளிடம் தந்து “ இவைகளில் எது உன் சிநேகிதையிட மிருந்து வந்தது, எது மற்றவரிடமிருந்து?” என்ருர்.

பிரபா ஒவ்வொன்ருகச் சொல்லிக்கொண்டே வந்தாள். மத்திய ஓர் மஞ்சள் கவரைக்கண்டதும் அதுதான் தன் சிநேகிதியிடமிருந்து ... தது என்று தெரிவித்தாள். உடனே டாக்டர் “ ஒகோ, தம்மைப்போல உம்முடைய சிநேகிதையும் படித்தவள்தான்போலிருக்கிறது. ஏனெனில் கடிதம் அனுப்பவேண்டுமானல் எழுதத்தெரியவேண்டுமல்லவா ? அநேகமாக அப்படித்தான் என்று நினைக்கிறேன்.” என்ருர்.

பிரபா சற்றுத்தயங்கி, “ அதற்குச்சந்தேகமென்ன ! நன்ருகப்படித்தவள்தான். ஏன் படிக்க, எழுதத்தெரியாவிட்டால் கடிதம் எழுதக்கூடாதாவென்ன ? ” என்ருள்.

“அதொன்றுமில்லை. கற்றவராயிருந்தால் தன்னிஷ்டம்போல் எதையும் எழுதலாம். அப்படியில்லாவிடின் பிறர்தயவை எதிர்பார்த்துத்தானேயாகவேண்டும்? அதிலும் ஒன்றிர்க்கு முக்கால் படித்தவர்களே கடிதம் எழுதுவார்கள்.”

“ அது வாஸ்தவம்தான்.”

“ அது சரி. இதோ இந்த மேல்விலாசம் அவள் எழுதியதாகத் தானே யிருக்கும் ?”

“ அதையேன் கேட்கிறீர்கள். அநேகமாய் அவளாகத்தான் இருக்க வேண்டும். கடிதம் ஒரு ஆள் மேல்விலாசம் ஒரு ஆள் எழுதுவதா ? அழகு தான்.”

“ ஆம். நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனல் இந்த விலாசம் யாரோ ஆண் மகன் எழுத்துப்போலல்லவோ தோன்றுகிறது !”

" ஆ! அப்படி யொன்றுமிராது. எங்கே பார்க்கலாம்." பின்னும் "ஆம் நீ சொன்னது போல்தான் இருக்கிறது."

" ஒரு வேளை வேறு யாராவது எழுதியிருந்தாலும் யிருக்கலாம். நிச்சயம் கூறுவதற்கில்லை."

டாக்டர் வெகு உன்னிப்பாய் பிரபாவையே கவனித்துக் கொண்டிருந்தார். ஆகையால் அவள் கடைசியாகப் பதில் சொல்லும் பொழுது அவள் முகத்தில் உண்டான மாறுபாட்டை நன்ருய்க் கண்டுகொண்டார். ஆதலால் அவள் ஏதோ மறைக்க முயல்கின்ருள் என்ற தீர்மானத்துடன்

" சரி. அதிருக்கட்டும். கடிதத்தில் உன் சிநேகிதை என்னவெழுதியிருந்தாள். மேல்விலாசம்தான் யாரையோகொண்டு எழுதச்சொவியிருப்பாள்." என்ருர்.

பின்னும் பிரபாவின் முகம் மாறியது. ஆகையால் டாக்டர் தன்னுடைய ஊக்கத்தை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டார்.

" விசேஷமாகவொன்றுமெழுதவில்லை. அவள் தற்பொழுது வெகு அழகாகப்பாடுகிருள் என்றும், சமீபத்தில் அவ்வூரில் நடந்த பந்தயத்தில் தான் பரிசுபெற்றதாகவும், மற்றப்படி குடும்ப க்ஷேம சமாசாரங்களைப்பற்றியும் எழுதியிருந்தாள்."

" உனக்கேற்ற சிநேகிதிதான். ஆம். இப்பொழுது எறிந்துபோன ...னதாகச்சொன்னுயல்லவா? அந்தப்போட்டோக்களில் இந்த சிநேகிதி ...ம் இருக்கிருளல்லவா?"

பிரபா யோசித்து " இல்லை" என்ருள்.

" சரி. உன் சிநேகியிருப்பது எந்த ஊர்? அவள் பெயர்?"

" அவள் இருப்பது பவானிபூர். அவள் பெயர் இந்திராணியென்பது. விலாசம் வேண்டுமென்று சொன்னுலும் தருகிறேன்."

" ஆகா வேண்டும்போது வாங்கிக்கொள்கிறேன்."

என்று கூறிவிட்டு டாக்டர், பாபுவை நோக்கி " பாபு நான் வந்து வெகு நேரமாகிவிட்டது. அடிக்கடி வந்து புண்ணைப் பார்த்துவிட்டுப்போகிறேன். நான்கொடுத்த உபத்திரவத்தை மன்னிக்கக்கோருகிறேன்."

" அதொன்று மில்லை. நீங்கள் அவசியம் தினம் குழந்தையைப் பார்த்துவிட்டுப் போகவேண்டும்."

" கட்டாயம் வருகிறேன். ஆ! ஒன்று மறந்துவிட்டேன். அமெரிக்காவிலிருந்து தங்கள் நண்பரொருவர் ஏதோ தங்களுக்குக் கடிதம் தந்ததாக அங்கிருந்து வந்த எனது நண்பர் தங்களிடம் சேர்ப்பிக்கும்படியாகச் சொன்னர். அவசரத்தில் கொண்டுவர மறந்துவிட்டேன். பிறகு கொடுத்தனுப்பிக்கிறேன்."

" அமெரிக்காவிலிருந்தா? கோபினுத்திடமிருந்துதான் என்று நினைக்கிறேன். ஆகா அப்படியே செய்யலாம்."

டாக்டர் விடைபெற்றுக்கொண்டு வெளியே சென்றதும் பிரபாவிற்கு " அப்பாட " வென்ற நிம்மதி வந்தது. 'எதடா சனியன்போலத்

தூண்டித்துளைத்துக் கேட்டானே !' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். பிறகு பைத்தியம் பிடித்தவள்போல் சற்று நேரம் இமைகொட்டாமலிருந்து விட்டு, பிறகு தன் சுயநிலைக்கு வந்தாள். சற்று நேரத்தில் அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வந்தது. புடவை நுனியில் துடைத்துக்கொண்டே " ஆகா ஓர் பெரிய தவறுதலல்லவா செய்துவிட்டேன். இதற்குள் இப்படி அவதிப்படுவதை விட்டு நிம்மதியாக விருக்கலாமே.————சரி, நான் செய்ததே சரி. இல்லாவிட்டால் வெளியில்வந்துவிடும்.'' என்று பலவிதத்தில் மனச்சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தாள்.

இவை யெல்லாவற்றையும் மறைந்து நின்று கவனித்துக்கொண்டிருந்த அவள் தாயார் " கண்மணீ, என் இவ்வாறு அல்லல் படுகிறாய் ? என்னிடம் உள்ளதை யுரைக்கலாகாதா ? '' என்று கூறிக்கொண்டே யவளை யணுகிறாள்.

## அத்தியாயம் 4.
## காதலின் ஏமாற்றம்

பவானிபூரில் ஓர் தெருவில் "சகுந்தபவனம்" இருக்கிறது. மாளிகை மிகவும் அழகாக இருக்கும்; புதிதாகச் சாலடித்த, வளைந்த ரோடு ஒன்று பவனத்திற்குள் செல்லுகின்றது. அதன் வழியே சென்றால் வீட்டின் முன் பாகத்தில் கொண்டு விடும். வீடு எட்டு மூலைகளுள்ளது. (Ocotgeal) உள்புரம் போகும் படிவரிசைகளின் ஓரத்தில் பூஞ்செடிகள், தொ[illegible] களில் வைக்கப்பட்டு, அங்கு நிறப்பப்பட்டிருந்தன. மற்றோர்பக்கம் தா[illegible] விற்குள் அழகான ஓர் கட்டிடத்திற்குள் திரையால் மூடப்பட்ட [illegible] ஆஸ்டின் கார் நின்றது.

வாயிலின் இரு புறங்களிலுமிருக்கும் வளைந்த மச்சுப்படியின் வழியாக உயரே சென்றால், ஆச்சரிய கரமாக நிர்மாணம் பெய்யப்பட்டிருக்கும் மெத்தையை யடையலாம்.

உயரே ஓர் அழகிய ஸெட்டியின் (Sette) முன்பு இரண்டு வாலிபர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவர் செல்வச்சீமான் போல் வைரக்கடுக்கன்களும் வைரமோதிரங்களும், அணிந்து கொண்டிருந்தார். மற்றவர் தூய வெள்ளை ஆடையுடன் திருநீறணிந்து வெகுசோபிதமாய் விளங்கினார்.

முதலவர் அப்பொழுதே சலவை செய்யப்பட்ட சில்க்சட்டை அணிந்திருந்தார். ஆடம்பரமாக வேறு யாதொன்றும் அணியாமலிருந்த போதிலும், செல்வச்செழுமை அவர் முகத்தில் தாண்டவமாடியது. இருந்தபோதிலும் நாம் குறிப்பிடும் சமயத்தில் முகவொளி குன்றியிருந்தது. கண்களில் ஜலம் ததும்பியது. ஹிருதயம் ஒருவிதமாக படபடவென்றடித்துக்கொண்டது. ஏதோ ஒரு கவலையால் அவதிப்பட்டவராய்த் தோன்றினார்.

வெகு நேரம் மௌனமாயிருந்த அவர், தன் பக்கத்திலுள்ள நண்பனை விளித்து "பூபா! எனக்கேன் இந்த வாழ்வு, இந்த ஐச்வர்யம், இந்த வைபவம்? நானோ என் காதல் விஷயத்தில் மிகவும் அபாக்கியவனாக இருக்கிறேன். பின் ஏன் இந்த லௌகிகங்கள் எனக்கு வேண்டும்?'' என்றார்

பூபேந்திரன் பேசத்துடங்கி "நீயேன் வீணில் அல்லல் படுகிறாய் அவள் உன்னை புறக்கணித்து விட்டாள் என்று நீதான் எண்ணிக்கொண்டு

இருக்கிறாய். எனக்கப்படித் தோன்றவில்லை. ஹரேந்திரா! நான் சொல்வதைக்கேள். வீண்கவலை கொள்ளாதே!''

நண்பா! உனக்கொன்றும் தெரியாது. அவள் இதற்கு முன் என் விஷயத்தில் நடந்துகொண்டதை யறிந்திருந்தால் நீ கட்டாயம் என்னைப் போலவே சொல்வாய். ஆகா! என்ன காலம். நான் தற்செயலாய் வீட்டின் வெளியே வந்தால் அவளும் காணப்படுவாள். ஆற்றிற்குச்சென்றால் அங்கும் காணப்படுவாள். என்னே, எங்கள் மனோபாவத்தின் ஒற்றுமையென்று நான் அதிசயித்ததுண்டு. எனக்குச் சங்கீதத்தின் மேல் பிரியம் என்று தெரிந்து நான் எங்காவது சமீபத்திலிருந்தால், வீட்டிலிருந்து பாடத் துவக்குவாள். அப்பொழுது நான் அனுபவித்த ஆனந்தத்தை என்னென்று சொல்வேன்! அவள் பாட்டை நிருத்தியவுடன், நானும் வெகு உத்சாகமாய் அபரிமிதமாகப் பாடும்பொழுது, அவள் செவிசாய்த்து மிகக் கவனமாய்க் கேழ்ப்பாள் என்றே சொல்லவேண்டும். ஏனென்றால் வேறு காரியங்கள் செய்து கொண்டிருப்பதாக பாவனை செய்து கொண்டிருந்தாலும், அவள் முகக்குறிப்பு அகக்கருத்தை நன்கு விளக்கும். நான் வீதியில் வந்து நின்றால் அவளும்ஏதாவது காரியத்தை முன்னிட்டு வீதியில் வந்தே நிற்பாள் இந்திராணி' யென்ற பெயர் உச்சரிக்கப்பட்ட மாத்திரத்தில் என் ஐம் புலன்களும் அமிர்தத்தை யள்ளியள்ளிப்பருகி, என் மெய்சிலிர்க்கும். இன்னமும் அவளைக்கண்ட மாத்திரத்தில் என் தேகம் என்னை அறியாமல் பர சப்படுகிறதே! ஆ, என் கண்மணி! என்னை இப்படியா காட்டிக்கொடுத் ய்? ஐயோ! எனக்கு என்னவோ செய்கிறதே!'' என்று பொத் தன்று முகத்தைக் கைகளால் பொத்திக்கொண்டு மேஜையின்மேல் சாய்ந்தான். குபேந்திரன், இந்தக்கண்ராவியைக்கண்டு மனதிற்குள் துக்கித்தாள் எனினும், அதை வெளியில்க் காட்டிக்கொள்ளாமல், நண்பன் மனதைத் திடப்படுத்தவெண்ணி "ஹரேந்திரா! என்ன, ஒன்றும் தெரியாதவன் போல் பிதற்றுகிறாயே! உம், எழுந்திரு. நாட்கள் கழித்தால் எல்லாம் மறந்துபோகும். கோடீச்சுரனாகிய உனக்கு இந்திராணியைக் காட்டிலும் பதின்மடங்கு அழகான பெண்ணைக்கலியாணம் செய்துவைக்கச்சொல்கிறேன்.'' என்று சமாதானப்படுத்தினான்.

"அருமை நண்பா! நீ சொல்லுவதொன்றும் பிரயோசனம் இல்லை. இந்த ஜன்மத்தில் நான் கொடுத்துவைத்தது இவ்வளவுதான். பூபா! இந்தக்கதி எனக்கு வேண்டியதுதான். இதற்கு நானே ஜவாப்தாரி. நான் உருவத்தில்மட்டும் ஆணாய்ப்பிறந்தேனேயன்றி, என் மனம் ஆண்மைத்தனமானதாகவில்லை. ஒரு தடவையாவது என் செல்வக்கிளியின் முகத்தை உயர்ந்து நோக்கினேனல்லன். எனக்கு அதற்குத் தைரியம் பிறக்கவில்லை. எத்தனையோ தடவை அவள் என்னெதிரில் தோன்றியிருக்கிறாள். அப்பொழுதெல்லாம் என் கால்கள் என்னைப்பின்னுக்கிழுத்தன. ஒரே தடவை மட்டும் தைரியத்தைக்கைவிடவில்லை. அதுவும் ஸ்வப்பனத்தில்த்தான். அந்த அற்ப சுகத்தைத் தான் நான் சுவைத்தேன். அத்துடன் என் பாக்யமுடிவு அடைந்தது. என் காதற்கிளி, தன் வீட்டில் ஏதோ செய்துகொண்டிருந்தாள். நான் தற்செயலாய் அங்குபோக நேரிட்டேன். முதற் கட்டில் அவள்

அவள் நின்றுகொண்டிருந்தாள். உள்ளே அவ்ள் சகோதரிகள், தாயார் எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். ஏதோ வலைபின்னிக்கொண்டிருந்தார்கள் போலிருக்கிறது. நான் வந்ததைக்கண்டதும் அவள் புன்னகை தவழ என் பக்கம் திரும்பினாள். என்னால் தடுக்கமுடியவில்லை. அப்படியே யவளை வாரியெடுத்து மார்போடணைத்துக்கொண்டு முத்திகள் ஈந்தேன். அப்பொழுது என்ன ஆர்வத்துடன் என்னைத் தழுவிக்கொண்டாள்! என் உடலெல்லாம் அமிருதம் ஜில்லென்று வருஷிக்கப்பட்டதுபோலிருந்தது. என் மகாபாபம், அந்தச்சமயத்தில் குறுக்கிட்டது. ஏனென்றால் இரண்டு எலிகள் சண்டை போட்டுக்கொண்டு என்மேல் விழுந்தன. அதனால் விழித்துக்கொண்டேன். அத்துடன் என் பாக்கியம் முடிவடைந்தது. அதற்கு பிறகு, நான் சொர்ப்பனத்திலாவது அவள் தரிசனம், அவளுடைய இன்பம் கிடைக்கவேண்டுமென்று முயற்சித்தும் கிட்டவில்லை!"

"நீ, கடந்த விஷயங்களைக் குறித்து விசனிப்பதில் யாதொரு பயனும் இல்லை. எல்லாம் விதியின் படியே நடக்கும். அதுவும் இந்த விஷயத்தில் நீ சற்றேனும் வருத்தப்படவேண்டிய பிரேமேயமில்லை. பள்ளிக்கூடம் திறந்ததும் நாம் கல்கத்தா சென்றுவிடுவோ மல்லவா? பிற்பாடு சிறிது சிறிதாக எல்லாம் மறைந்துவிடும். கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக்கொள்ளாதே!"

"உன் உபதேசங்களெல்லாம் காட்டில் பெய்த மழைபோல் ஆகின்றனவே யென்று வருத்தப்படுகின்றேன். அவள் இப்பொழுது பராமுகமா[illegible] ஆகிவிட்டபடியால், முன் நடந்தவைகளை நினைப்பூட்டித்தான் சற்று ஆ[illegible]தல் அடையவேண்டியிருக்கிறது. அப்படிச்செய்யாவிட்டால் என் மனம் படுகிறபாடு, துள்ளுகிற துள்ளு, கொதிக்கிற கொதிப்பு சீக்கிரத்தில் தணியாது. இப்பொழுது என்னைக்கண்ட மாத்திரத்தில் சடக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு உள்ளே சென்றுவிடுகிறாள். அது கோபத்துடன் செய்வதாகவும் தோன்றவில்லை. ஆகையால் நாசுக்காக அணுகத்தெரியவில்லையென்ற காரணத்தால் ஏற்பட்ட வெறுப்பாய் இருக்குமோ என்னவோவென்று நினைக்கிறேன். நமக்கு பள்ளிக்கூடம் இரண்டு நாட்களில் திறக்கப்போகிறார்கள். ரஜாவிடும்பொழுது. நான் என்னென்னவெல்லாம் நினைத்துக்கொண்டு வந்தேன்! கட்டாயம் அவளைக்கண்டு முடிவுசெய்ய வேண்டுமென்று கடும் தீர்மானத்துடன் வந்தேனே. அவையெல்லாம் அவளைக்கண்ட மாத்திரத்தில் காற்றாய்ப்பறந்துவிட்டனவே. பின்னும் எங்கே மறுத்து விடுவாளோ வென்ற பயமும் என்னை வதைத்தது. ஏன், பேடித்தனம் என்னை மூடிவிட்டது. இப்பொழுது, ஏமாந்து நடுத்தெருவில் நிற்கிறேன். ஹா! என்னசெய்வேன்."

சுருங்கச் சொல்லின் அவர் பரிதாபகரமான நிலையில் இருந்தார். பூபேந்திரனும் தானினிமேல் சொல்வதில் உபயோகமில்லையெனத்தெரிந்து தான் பேசுவதை நிறுத்திவிட்டு எழுந்து நின்றான்.

அதைக்கண்ட மற்றவர் அவனையுட்காரவைத்து "நான் ஒரு சமாசாரம் சொல்லப்போகிறேன். அதுதான் என் மனக்கலவரத்திற்குக்காரணம். இந்திராணியின் — அவள் பெயரைச்சொல்வதற்கே என் நாக்கூசுகிறது—

நோட்டம் வேறொருவிடத்தில் சென்றிருப்பதாகத்தெரிகிறது. இதுநாட் பரியந்தம் என்னை நேசித்திருந்தவள் திடீரென மாறுவதற்கு அதுவே காரணம். கலியாணமும் முடிந்துவிடும் என்றே எனக்குத் தோன்றுகிறது.'' என்றார்.

இதை பூபேந்திரன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இதைக்கேட்டவுடன் அவன் மனம் தவித்தது. இருப்பினும் தனது கோபத்தை யடக்கிக் கொண்டு, பின்னும் அந்த விஷயத்தைப்பற்றி யறியவிரும்பினன். ஹரேந்திரன் கூறத்தொடங்கி, "நான் தற்சமயம் உனக்கு அந்த மனிதனைச் சொல்லக்கூடாத நிலையில் இருக்கிறேன். எனக்கே முடிவாக ஒன்றும் தெரியவில்லை. நான் நினைப்பது மட்டும் உண்மையானல், அவள் அவனுக்கு ஈடுபடுவாளானல் அவள் ஆற்றில் விழுந்தது போலவே யாம். என்ன நடக்கிறதோ பார்ப்போம். '' என்றார்.

இவ்வாறு ஆனந்த பவனத்தில் சம்பாஷணைநடக்கும் சமயத்தில் வேறொருவிடத்தில் ஓர் காரியம் நடைபெற்றது.

'திலகர் கட்டம்' என்பது ஓர் பெரிய பூங்காவனம். அபூர்வமான புஷ்பவகைகளும் மரவகைகளும் அங்கு காடுபோல் வளர்ந்திருந்தன. ஜனங்கள் அதை சாயங்காலவேளைகளில் உல்லாசமாய்க் கழிப்பதற்கு ஓர் வசந்த மண்டபமாய் உபயோகித்து வந்தனர். கண்டவிடங்களில் ஸோபாக்களும், நாற்காலிகளும், ஊஞ்சல்களும் போடப்பட்டு மன்மதனுக்கு உறைவிடமாருந்தது. அங்கங்கே சதிபதிகள், நண்பர்கள், கும்பல் கும்பலாய்க்கூடிஉல்லாசமாகப் பொழுதைப்போக்கினர்.

உத்யானவனத்தின் வடக்குக்கோடியில் ஓர் சவுக்கையிருக்கிறது. அதன் பக்கத்தில் ஸ்படிகம் போன்ற கற்களால் அமைக்கப்பட்ட ஏரி ஒன்று இருக்கிறது. ஏரியின் மத்தியில் தேவகன்னிகை போன்று அமைக்கப்பட்ட குழயின் வழியாக ஓயாமல் தண்ணீர் வில்போல் வளைந்து வாவியினுள் விழுகிறது. இந்த ரமணீயமான ஸ்தலத்தின் முன்தான் நாம் குறிப்பிட்ட சவுக்கையென்று சொல்லப்பட்ட கொடிப்பந்தல் இருக்கிறது. அதன் மத்தியில் ஓர் சலவைக்கல் பீடம் ஒன்று இருக்கிறது.

அப்பீடத்தின்மேல் ஓர் சுந்திரவதனி வீற்றிருந்தாள். பக்கவில் ஓர் ஆடவன்—அழகியவாலிபன்—புன்னகை தவழ அவ்வணங்கிடம் உரையாடிக்கொண்டிருந்தான். நேசப் பான்மையிலே சம்பாஷணை நடந்தது.

அந்த மனிதன் மிகவும் வசீகரமான தோற்றத்தையுடையவன். எந்தப்பெண்ணையும் அதிசீக்கிரத்தில் தன்வயப்படுத்தும் சமர்த்துடையவன். ஏனென்றால் அவனிடம், நாம் குறிப்பிட்ட பெண்மணி அன்னியளாயிருந்தும் வெகு சரசமாக வார்த்தையாடினள். அவன் மொழிகள் அவள் உள்ளத்தைக் கவர்ந்ததென்பது அவள் முகக் குறிப்பினல் விளங்கியது. அவன் அந்த மாதுக்கு அன்னியனென்பதும் அவர்கள் பேச்சிலிருந்து விளங்கியது.

கடைசியில் அந்த ஆடவன், அவள் சமீபம் நெருங்கி ஏதோ ரகசியம் சொல்ல விரும்புவதுபோல் அவள் முகத்தண்டை நெருங்கினன். ஒரு க்ஷணம் கழிந்ததும் சரேரென்று அவளிடம் விடைபெற்றுக்கொண்டு அப்புறம் சென்றான்.

(தொடரும்)

## இலகுவான எழுத்து பந்தனப்போட்டி நிர்—1

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | 5-A. |
| 5-B. | | | | | | | |
| | | 6 | | | | | |
| | 7 | | | | 8 | | |
| 9 | | | | 10 | | | 11 |
| | | 12 | 13 | | | | |
| | 14 | | | | | 15 | |
| 16 | | | | 17 | | | |

குறுக்கே.

1. ஓர் புண்ணியஸ்தலம்
5. குற்றம்
5. B. பகுத்தறிவற்றவை
6. ஓர் வியாதி
7. அஞ்ஞான நிலையைக் குறிக்கும்.
8. குளிர்ச்சி
9. சமீபத்திலிருப்பதைக் குறிக்கும்.
10. நமக்குச்சொந்தமற்றது
12. இன்மை
15. இடது
16. கொஞ்சம்
17. துன்பம்

கீழே

1. செழிப்பான பிரதேசங்களில் ஓடும் ஓர் நதி
2. அதிகமற்ற
3. ஓர் தேசம்
4. ஓர்வகை ஸங்கீதம்
5. A. அடுப்பு
9. ஏரி
11. திரட்சி
13. மணற்காடு
19. எழுது.

(124-ம் பக்கம் கடைசியில் பார்க்க.)

## மதிப்புரை:-

சரீரமனோரக்ஷிணி அல்லது துளஸியின் ரகஸியம். புரபஸர் யூதாஜி மகந்து அவர்களின் சீடர் ரெ. வே. பாலகிருஷ்ணன் அவர்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் இச்சிறு புத்தகம் துளசியின் மஹிமையைத் தெளிவாக விளக்குகிறது. துளசியை 63 பக்குவங்கள்செய்யும் முறைகளும் அவைகளின் உபயோகங்களும் இதில் எழுதப்பட்டிருக்கின்றன. இதனை வாசித்தறிந்து அனுபவத்திற்கு கொண்டுவரவேண்டியது நமது கடமை.

### ஸ்ரீ அரவிந்த யோகவிளக்கம்.

ஸ்ரீ அரவிந்தருடைய யோகவுண்மையை இந்நூல் இனிய, எளிய மொழிகளில் விளக்குகிறது. கர்மபூமியாகிய நமது பாரததேசமே யோக சாதன பூமியென்றும், யோகத்தின் நோக்கம் மனித ஜாதியின் விடுதலையென்றும் அதற்கு வேண்டிய சாதனங்களும் வெகுதெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. "மனிதன் தன்னுட்பொலியும் வானரசையடைந்து, எங்குங்கடவுள்கண்டு, கடவுளுணர்வுடன் புறவாழ்வையும் புனிதமாக்கி யுயர்த்துவதே இதன் கருப்பொருள்." இதனை எழுதியவர் நம் பத்திரிகையில் அடிக்கடி கட்டுரைகள் எழுதியுதவும், ஸ்ரீ சுத்தானந்த பாரதி அவர்களே.

### ஸ்ரீ த்யாக ராஜ சுவாமிகள் திவ்யசரிதம்.

(மாந்தை. சா. கிருஷ்ணய்யர் எழுதியது.)

இப்புத்தகத்தில் ஸ்ரீ தியாகராஜரின் சரித்திரம் விரிவாகவும், மேம்பாடகவும் அநேக மேற்கோள்களுடன் அழகான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. சுவாமிகளைப்பற்றிய சில அபூர்வமான விஷயங்களும் காணப்படுகின்றன. இதன் ஆசிரியர் மிகுந்த பிரயாசையுடன் விஷயங்களை ஆராய்ந்து எழுதியிருக்கிறார். சுவாமிகளின் திருவுருவப்படங்களுடன், அழகாக அச்சிடப்பட்டுமிளிர்கின்றது.

### சுகுணவதி (மாந்தை சா. கிருஷ்ணய்யர் எழுதியது.)

'காதலின் பாதை சலவைக்கல்லால் இழைத்ததல்ல' என்ற வசனத்திற்கிணங்க இக்கதாநாயகநாயகிகளின் காதல் முற்றுப்பெருவண்ணம் இடையூறுகள் குறுக்கிடுகின்றன. ஆயினும் இறுதியில் எல்லாம் இனிது நிறைவேறுகின்றது. 'நினைப்பின் கேடு தனக்கே,' 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' இவைபோன்ற நீதி போதனைகள் பொதிந்து கிடக்கின்றன. இதன் தமிழ்நடை அழகாக அமைந்துள்ளது. அங்கங்கே அமைந்த அடுக்குச்சொற்களும், மனோபாவத்திற்கேற்ற பதப் பிரயோகங்களும் இதன் தனிக்குணங்களாகும். ஊணுக்கு ஊறுகாய்போன்று இடையிடையே நகைச்சுவைதோன்றி வாசகர்களை ஊக்கிவிற்கின்றது அநேக ஆப்டோன் படங்களுடன் அழகாக அச்சடிக்கப்பட்டு அறிஞர் பலரின் மதிப்புரைகளும் பெற்றுத்திகழ்கின்றது.

# "கல்யாணியின் அதிர்ஷ்டம்"

(N. C. G. ஸ்ரீனிவாசவரதாச்சாரியார்,)

கல்யாணிக்கு கல்யாணம் நடந்து இரண்டு வருடங்களாகியும் தன் கணவன் கலியாணராமனைக்கண்டு பேசியதில்லை. விவாகமாகியும் வாழ்நாட்களை வீண் நாட்களாய் கழிக்கின்றோமே என்ற கவலை ஒருபுறம் அவளைத் தாக்கியது. தன் பெற்றோர் தனக்கு விவாகம் செய்துவைத்தும் "மாப்பிள்ளை திரும்பி வந்து பெண்ணுடன் இல்லறம் நடத்துவதைப் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே" என்று புலம்புவதைக்கண்டு கல்யாணியின் கண்களில் அவளையறியாது கண்ணீர் வழிந்தோடியது. தனது அன்னையின் சகோதரனது குமாரன் ஜெயராமனுக்குத் தன்னைக்கொடுக்கும்படி கேட்டதற்கு கொடுக்க மறுத்த தன் பெற்றோரைக் கோயிலிலும், குளத்திலும், ஆற்றும் தாய்மாமனின் மனைவியை நினைக்கும்போதெல்லாம் பயந்தாள். கணவன் தன்னை அழைத்துப் போகாத காரணம் தெரியாது தவித்தாள். விவாககாலத்தில் கணவன் வீட்டார் கொடுத்துப்போன சிம்லா விலாசத்திற்கு பல கடிதங்களெழுதியும், "விலாசத்தார் ஊரிலில்லை" என அவைகளில் எழுதப்பட்டு திரும்பிவருவதை நினைத்து ஓர் பக்கம் திகிலும், மற்றோர் பக்கம் ஆச்சரியமுமடைந்தாள். இவ்வாறெல்லாம் கஷ்டப்படுவதற்கா தன்னைக்கடவுள் படைத்தார்? என கடவுளை வணங்கினாள். ஒருவேளை விவாககாலத்தில் கணவனுக்குச் சீர் வரிசைகள், வரதட்சணை முதலியன கொடுத்தது போதாதென நினைத்து, கணவன் தன்னை அழைக்காமல் இருக்கிறானோ? வென நினைத்துப்பார்த்தாள். மறுநிமிடம் அவர்கள் அவ்விதம் நினைப்பதற்கு இடமில்லாமலே தன் தந்தை கடனுடனை வாங்கி வெகு விமரிசையாய் செய்திருப்பதால் தான் நினைத்ததுபோல் அவர்கள் நினைக்க இடமில்லை யென மனதைத் தேறுதல் செய்துகொண்டாள். இன்னும் எத்தனை நாட்கள்தான் இம்மாதிரி தன்னை கடவுள் சோதிக்கப் போகிறார்? போகப்போகப் பார்ப்போமென்று ஒருவாறு மனதை திடம்செய்துகொண்டு காலம் கடத்தினாள் அந்நங்கை.

* * * *

கல்யாணி என்னும் சிறுமி கோமளப்பேட்டை குப்புசாமிஅய்யரின் ஏகபுதல்வியாவள். குப்புசாமிஅய்யர் கோமளப்பேட்டைக் கிராமத்தின் கர்ணம். தன் குமாரத்திக்கு வயது 12—நிறைந்துவிட்டதால் சீக்கிரமாகவே விவாகம் செய்துவிடவேண்டுமென்று அவரது மனைவி மங்களத்தம்மாளிடம் பலதரம் கூறியதுண்டு. மேலும் "சாரதாச் சட்டம்" என்னும் ஆபத்துக்குப்பயந்து விரைவாய் விவாகம் செய்துவிடவேண்டுமென்று மங்களத்தம்மாள் கூறி

னள். அது சமயம் வீட்டுவாயிலில் மரவேலை செய்துகொண்டிருந்த தச்சன் " அம்மா—நீங்கள் என்னவோ சட்டம் என்று சொன்னீங்களே. நாம் செய்யும் கட்டில் தேக்குச் சட்டத்தினலன்றோ செய்கிறோம். எஜமானிடம் சொல்லி மரக்கடைக்குப்போய் சாரதா சட்டம் வாங்கிவரச்சொல்லுங்க. ஏதோ எனக்குத் தெரிந்தவரையில் கச்சிதமாய் வேலைசெய்து " சாரதா சட்டக்கட்டில் " செய்து தருகிறேன் என்றுகூற ஐயரும் — அம்மாவும், குபக்-- குபக் என்று சிரித்தனர். பல நாட்களாய் வரனுக்காக அலைந்து சரியான வரன் கிடைக்காது அலுத்துப்போன ஐயரிடம் ஓர் நாள் படாடோப உடைகளணிந்து இருவர் வந்தனர். ஐயரும் வந்தவர்களை விசாரிக்க அடியில் கண்டவிதம் சம்பாஷணை நடைபெற்றது.

" நீங்கள் யார் ? யாரைத் தேடுகிறீர்கள் ? என்னல் ஏதேனும் காரியம் ஆகவேண்டியிருப்பின் கூறுங்கள் " என்றார் ஐயர். " ஐயா — உங்களை எனக்கு நன்கு தெரியும். ஆனல் உங்களுக்கு என்னைத்தெரியாது. உங்களிடம் ஓர் பொருள் இருக்கிறது. அதை என் குமாரனை இவன் கவர எண்ணங்கொள்கிறான். நாங்கள் தற்போது இருப்பது சிம்லா பட்டணம். மதுரையில் எங்களுக்குத் தெரிந்த ஒருவரைப் பார்த்துப்போக வந்தோம். தங்களிடம் இருக்கும் அப்பொருளை அவ்விடம் கேள்வியுற்றவுடன் தங்களைப்பார்த்துப்போக வந்தோம் " என்றார் வந்தவரில் ஒருவர்.

" ஐயா — நீங்கள் கூறுவது எனக்குப்புலப்படவில்லை. பொருளா ? — அது என்ன பொருள் ? சற்று விவரமாய்க்கூறின் யான் யான் கிரகிக்க முடியும். ஹோ — ஒருவேளை நான் நினைக்கும்வண்ணம் நீங்கள் கூறுவது இருக்கலாமோ ? என்புதல்வி கல்யாணி இருக்கிறாள். இவ்வருடமே அவளுக்கு விவாகம் செய்ய உத்தேசம். மேலும் சாரதா சட்டத்திற்கு பயப்படவேண்டி யிருக்கிறது. இன்னும் சில மாதங்களிற்குள் அமுலிற்கு வந்துவிடுமாம். " என்றார் ஐயர்.

" ஆம். நீங்கள் கூறும் தங்களது புதல்வியைத்தான் என் புதல்வனும் விரும்புவது. பையன் சிம்லாவில் ரயில்வே ஆபீஸில் உத்யோகம் பார்க்கிறான். சம்பளம்ரூ. 75–பெறுகிறான். தங்கள் இஷ்டம் எப்படியோ ? கூறுங்கள் " என்றார் வந்தவர்.

" நாங்களும் வரனுக்குத்தான் அலைந்து கொண்டிருக்கிறோம். நல்ல வேளையாக கடவுளே உங்களை இங்கு அனுப்பி இருக்கிறார்போலும். சம்மதமே உங்களுக்குப் பூர்வீகம் எந்த ஊர்? தங்கள் நாமதேயம்?" என்று கேட்டார் ஐயர்.

" திருச்சி சமீபம் குரங்குப் பேட்டையே எங்களது பூர்வீக ஊர் என் பெயர் சொர்ணமையர். குமாரன் பெயர் கல்யாணராமன். பையனுக்கு இன்னும் ஒரு வாரமே லீவ் இருக்கிறது. விவாஹம் சீக்கிரமே நடத்திவிடின் மிகவும் நலம் " என்று விடையிறுத்தார் வந்தவர்.

இத்துடன் அவர்களது ஸம்பாஷணையும் (.) புல்ஸ்டாப் அடைந்தது.

* *

மேல்க்கண்ட ஸம்பாஷணை நடந்த மறுவாரத்திற்குள் விவாகமும் நன்குநடந்தேறியது. பின் மாப்பிள்ளை சிம்லா சென்று வருவதாய் கூறிச்சென்றான். விவாகம் நடந்து இரண்டு வருடங்களாகியும் தன்னை அழைத்துச்செல்லாததுபற்றி கல்யாணி மிகவும் வருந்தினாள். மாப்பிள்ளையிடமிருந்து யாதொரு கடிதமும் கூட வரப்பெறாத ஐயர் தானாவது சிம்லா சென்று பார்த்துவருவதாய் புறப்பட்டார். சிம்லாவை அடைந்த • ஐயர் தன் உணவின் நிமித்தம் ஓர் ஒட்டலிற்குள் நுழைந்தார். உணவு அருந்திக்கொண்டிருக்கும் சமயம் ஓர் கிழவர் சாப்பாடு பரிமாரிக்கொண்டு வருவதைக்கண்டார். அவரது முகத்தை உற்று நோக்க ஆச்சரியமடைந்தார். அக்கிழவனார் சம்மந்தி குரங்குப்பேட்டை சொர்ணமய்யராய் காணப்பட்டார். இதைக்கண்டதும் திடுக்கிட்ட நமது ஐயர் அவரை உற்று நோக்க, அவரது சம்பந்தியான சொர்ணமய்யர் குப்புசாமி அய்யரை அறிந்து கொள்ளாது ஹோட்டலில் சாப்பிட வருபவரில் ஒருவரெனக்கருதி “ஐயா — சாப்பிட்டாய்விட்டதா ? இன்னும் ஏதேனும் தேவையா ? கைகழுவ அதோ தண்ணீர் குழாய் இருக்கிறது. சென்று கை அலம்புங்கள்” என்றார். குப்புசாமி அய்யரும் தன்னை யாரெனக் காட்டிக்கொள்ளாது கைகழுவிய உடன் ஹோட்டலிற்குக்கொடுக்க வேண்டிய தொகையைச்செலுத்தி அங்கும் இங்கும் கண்ணால் பார்வையிட்டார். அவர் அங்ஙனம் பார்த்ததிலிருந்து வேறு யாரையோ தேடுவதுபோல் தோன்றியது. தான் தேடியவர் தென்படாமையால் ஐயர் அவ்விடம்விட்டு நீங்கினார். பின் மனதிற்குள் இது மிகவும் வேடிக்கையாகவன்றோ இருக்கிறது; இவர்கள் நமது வீட்டிற்கு வந்தகாலத்து மகாபடோபமாகவன்றோ விளங்கினர். யாரோ பெரிய தனிகர் எனக்கருதி மோசம் போனேனே ! கண்ணென மதித்த கல்யாணியை இவர் குமாரனுக்கன்றோ கொடுத்து கலங்கலாயிற்று. இருக்கட்டும். மாப்பிள்ளையின் தந்தை அகப்பட்டார். ஆனால் கல்யாணராமனைக் காணோம். எப்படி அவனைக்காணுவது ? சரி. ஒரு யோசனை தோன்றுகிறது. தினசரிப் பத்திரிகையில் “ஒரு காபி ஓட்டலிற்கு 40—ஆள் தேவையென்று விளம்பரம் செய்தால் அநேகர் வரலாம் அக்கூட்டத்தில் நமது கல்யாண ராமனும் என் வரக்கூடாது?” என்று கருதியவராய் அன்றைய மாலைப்பத்திரிகையிலே விளம்பரமும்செய்தார். மறுநாள் காலை இவர் கொடுத்திருந்த விலாசமுள்ள கட்டிடத்தில் சுமார் 60–பேர்வரை அவர் குறிப்பிட்ட வேலைக்கு ஆஜராயிருந்தனர். ஐயர் ஒவ்வொருவரையும் நன்கு கவனித்துச் சென்றான். அவர்களிடை நமது கல்யாணராமனும் வந்திருந்தது கண்டு தன்யோஜனைபலித்தது கண்டு மகிழ்ந்தார். (கலியாணராமனுக்கு ரயில் உத்தியோகம்பிடிக்கவில்லை போலும்!) ஆனால் தனது மாமனார் முன் தான் நிற்கிறோமென்பதைக் கல்யாணராமன்தெரிந்துகொள்ள வில்லை. இதையறிந்த ஐயர் மாறுவேடத்தைக்களைந்து சுயஉடையுடன் விளங்கவே, கல்யாணராமன் வெட்கித்தலை தெறிக்க வெளியே ஓடினான். நமது ஐயர் கத்திக்கத்திப் பலதடவை கூப்பிட்டும் ஓடி மறைந்தான் கல்யாணராமன். அதனால் மனமுடைந்த ஐயர் பின்னும் இரண்டு தினம் வரைக்கலியாணராமனைத்தேடி அலைந்தும் பிரயோஜனப்படவில்லை. இவ்வெட்கத்தை வெளியிற்கூற மனமில்லாதவராய் திரும்ப கோமளப்பேட்டையை அடைந்தார்.

* * *

மேலே கூறிய சம்பவங்கள் நடந்து ஆறுமாதகாலங்களுக்குப்பின்னர் ஒருநாள் மாலை 6—மணி சுமாருக்கு சுமார் 20—வயதுடையவனும், அழகு வாய்ந்தவனுமான ஓரிளைஞன் டில்லி நகரின் கிழக்கு பாகத்தில் அமைந்த ஒரு பெரிய சாலையில் ஓர் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு ஏதோ சிந்தித்துக்கொண்டு இருந்தான். மகத்தான துக்கத்திற்கு ஆளானவனென அவனது கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீர் அறிவித்தது. சற்று நேரத்திற்கெல்லாம் ஏதோ ஓர் விதமான முடிவுக்கு வந்த அந்த இளைஞன் பெருமூச்சுவிட்டு எழுந்தவனாய் "இனி நான் இவ்வுலக வாழ்க்கையில் இருப்பது நியாயமாகாது. மிக்க ஆடம்பரமான முறையில் பகட்டுக் காட்டி ஒரு பதங்கிளியைத்தொட்டு மணமாலை சூட்டினேன். அப்பைங்குழலாளைப்பின் திரும்பிப்பார்க்கவுமில்லை. அப்பெண்மணியின் கண்ணீர் காணச்சகியாத அவளது தந்தை என்னைத்தேடிவந்து சிம்லாவில் கண்டுபிடித்தும் விட்டார். பணக்காரவேஷம் போட்ட மருமகன் காபிக்கிளப் வேலைக்கு வந்து நின்றதைப்பார்த்ததும் அவர் மனம் எங்ஙனம் இருந்திருக்கும்? அவர் முன்னிலையில் அகப்பட்டுக்கொண்ட சமயம் என் மனம் பட்டபாடு! அப்பாட — போதும். மானம் போன பின் உயிர்வாழலாமா? சீ — சாவதேமேல்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டவனாய் அங்கிருந்த மரத்தில் கயிறு ஒன்றைக் கட்டி அதைக் கழுத்தில் கட்டிக்கொள்ளச்சென்றான். அதே சமயத்தில் "யாரது? மரத்தடியில்? இதுதான் ஆண்பிள்ளையின் காரியமா" என அதட்டிய குரலில் ஒருவர் கேட்டுக்கொண்டே அண்டையில் நெருங்கினார்.

இச்சப்தத்தைக்கேட்ட கல்யாணராமன் திடுக்கிட்டுப்போனான். தன்னை அதட்டிக்கொண்டு வந்தவர் போலீஸ் உடையில் தோன்றியபடியாலும், தற்கொலை செய்துகொள்வது குற்றமாகக் கருதப்படுவதாலும், அவன் நடுநடுங்கியவனாய் "எனது வாழ்நாளைய துக்கம் சகிக்கமுடியாது. மனம் துணிந்து இக்காரியத்தில் இறங்கிவிட்டேன். அடியேனைத் தாங்களே ரக்ஷிக்கவேண்டும்" என்று கண்ணீர் பெருக அவரது கால்களைப்பிடித்துக் கொண்டான். நிருபேந்திரபானர்ஜி என்ற பெயர்கொண்ட அம்மனிதர் தன் காலில் கிடந்த அவ்வாலிபனைத்தூக்கி "பயப்படாதே! இத்தகைய துணிச்சலான காரியம் செய்யக்காரணம் யாது?" எனக்கேட்டார்.

"ஐயா — உண்மையைக் கூறுகிறேன். என் தந்தையும் நானும் இரண்டு வருடங்களுக்கு முன்பு மதுரை சென்றிருந்தோம். நாங்கள் சிம்லாவில் உள்ள காபிஹோட்டலில் பணிசெய்துகொண்டிருந்தோமாயினும் மதுரை செல்கையில் மிகவும் படாடோபமாய் ஓர் பெரிய பணக்காரர் போன்று உயர்ந்த ஆடைகளை அணிந்து சென்றோம். அவ்வூரிலுள்ள புதுமைகளையெல்லாம் பார்த்த பிறகு பக்கங்களிலுள்ள கிராமங்களைப்பார்க்க வேண்டுமென்று அவாதோன்றியது. அங்ஙனமே பல கிராமங்களுக்குச் சென்றோம். யாங்கள் சென்ற கிராமங்களில் கோமளப்பேட்டை என்ற கிராமமும் ஒன்றாகும். அங்கு தந்தையுடன் தெருவில் சென்றுகொண்டிருக்கையில் ஓர் வீட்டில் ஓர் இளம் பெண் நின்றிருப்பதைக்கண்டேன். கண்ட

தும் சிறிது நிமிடம் ஆங்கு அவ்வீட்டிற்கு சிறிது தூரத்தில் நின்று பிரமித்த படி நின்றுவிட்டேன். அவ்வளவு அழகுவாய்ந்தவள். அதுபோது என் தந்தை சிறிதுதூரம் (நான் அவரது பின்புவந்துகொண்டிருக்கிறேனென நினைத்து) முன்பு சென்றுகொண்டிருந்தார். பின் என்னைத்திரும்பிப்பார்த்த என் தந்தை மறுபடியும் என்னை அடைந்து என் விருப்பத்தைத் தெரிந்து கொண்டார். பின்பே தான் நான் சிம்லாவில் ரயில்வேயில் உத்யோகம் செய்கிறேனென்று பலவித பொய்களையும் கூறி விவாகமும் செய்து வைத்து விட்டார். மறுபடியும் சிம்லாவடைந்தோம். அடைந்ததும் எங்களது பூர்வீகத்தொழிலான காபிஹோட்டலில் பணிசெய்யத்தான் நேர்ந்தது. இதனுல் என் மனைவியை அழைக்கவுமில்லை. அவர்கள் போடும் கடிதங்களையும் நான் பெற்றுக்கொள்ளாது தபாற்காரனிடம் "நான் ஊரிலில்லை" என்று திருப்பி அனுப்பிவிடும்படி கூறலானேன். என்னைக்காணுததாலும், எனது கடிதம் ஒன்றும் அவர்கட்குக் கிடைக்காததாலும் என் மனைவியின் தந்தை என்னைத்தேடிப்பிடிக்க சிம்லா வடைந்தார்.'' என்று கூறித்தன்னை ஹோட்டலில் கண்டுபிடித்த விதத்தையும் நடந்தது நடந்தபடியே கூறிக்கண்ணீர் பெருக்கலானுன்.

"என்ன காரியம் செய்தாய்? ஓரிளம் பெண்ணை ஏமாற்றி கல்யாணம் செய்து கொண்டதுமன்னியில் உன் உயிரை மாய்த்துக்கொள்ள நினைத்த உனக்கு நான் எவ்விதம் உபகாரம் செய்ய முடியும்? ஆயினும் நீ மனைவியாய்க் கொண்ட அக்காரிகையை நினைத்து உன்னைக் கெடுக்க என்மனம் இடம் கொடுக்கவில்லை. உனக்காகவும்—உன் தந்தைக்காகவும் மனம் இரங்கி உன்னை விடுவிக்கிறேன் என்று உன் பேதை மனம் நினைக்கின்றதா? ஒருபோதும் இல்லை சரி. நீ எது வரை படித்திருக்கிறுய்? உன் பெயர் என்ன? உன் தந்தை இப்போது எங்கு இருக்கிறுர்?" என்றுர் போலீஸ் கமிஷனரான நிருபேந்திரபானர்ஜி.

"ஐயனே—என்னை மன்னிக்கவேண்டுவது தங்களின் கடமை. யான் செய்த காரியம் உண்மையில் ஓர் பெரும் தப்பிதமாகும். என் மாமனுர் குப்புசாமிஅய்யர் என்னை ஹோட்டலில் சந்தித்தசமயம் என் தந்தை அன்றே என்னிடம் சொல்லாமல் எங்கோ சென்று விட்டார். அவரைக் காணேம். நான் "இன்டர்மீடியட்" கிளாஸ் வரை படித்திருக்கிறேன். சரியான சிபார்சின்மையினுல் வேலை கிடைக்கவில்லை.'' என்று பதிலுரைத்தான் வாலிபன். கல்யாணராமனது விருத்தாந்தங்களைக் கேட்டதும் நிருபேந்திர பானர்ஜீ மனமும் இளகியது. நிருபேந்திரர் இயற்கையாக நல்ல குணம் கொண்டவர். பெருந்தன்மையும், கருணையும், அவரது முகத்தில் தாண்டவமாடின. டில்லிநகர் போலீஸ் உதவி உதவி கமிஷணர் வேலைபார்த்து வந்த அவரது புகழ் எங்கும் வியாபித்திருந்தது. மாலையில் உலாவ வந்த சமயத்தில் மேலே கூறிய சம்பவங்கள் நடைபெற்றன. சற்று பொருத்து நிருபேந்திரர் வாய்திறந்து

"வாலிபனே! பயப்படாதே. தற்சமயம் எனது ஆபீசில் ஓர் கிளார்க் வேலை காலியாக உள்ளது. அப்பதவிக்கு அனேக விண்ணப்பங்கள் வந்திருக்கிறபோதிலும் அதை உனக்கே தருகிறேன். அதைத்தற்காலீகமாக பார்த்துவா. பின் போலீஸ் இன்ஸ்பெக்டர் பயிற்ச்சிக்கு அனுப்பு

கிறேன்." என்று கூறி வாலிபனைத் தேற்றுவித்துத் தன்னுடன் அழைத்துச் சென்றார் கமிஷனர்.

* * *

தன் மருமகன் விஷயம் தெரியாததாலும், கண்ணில் கண்டும் மருமகனைத்தவற விட்டதை நினைத்து,மனமாற்றம் கொண்ட குப்புசாமிய்யர் சிறிது காலத்திற்கெல்லாம் கண்களை மூடி இவ்வுலக வாழ்வை வெறுத்துச்சென்றார். கணவனை இழந்த குப்புசாமி அய்யரின் மனைவி தன் குமாரி கல்யாணியுடன் கஷ்டமான வாழ்க்கை நடத்தத்தொடங்கினாள். இரவெல்லாம் அவள் கண்ணீர்விட்டு அழுவாள். இத்தகைய நிலையில் இரண்டாண்டு கழிந்தன. கல்யாணிக்கு இப்பொழுது வயது பதினாறு. யௌவனம் நிறைந்து சகல அழகும்பொருந்திய யுவதியாக நின்றாள். இத்தகைய அழகுபொருந்திய பெண்ணைக்காணும்தோறும் தாய் படும் துக்கம் கூறமுடியாததாய் இருந்தது.

"காலையில் தபாற்காரன் கடிதம் கொடுத்தானே. அதைப்பிரித்துப் பார்க்கவில்லையே." என்று ஒருநாள் தன் குமாரத்தியிடம் மங்களத்தம்மாள் கூறினள்.

"எனக்கும் ஞாபகமில்லாது போயிற்று." எனக்கூறி கடிதத்தைப் பார்த்தாள் கல்யாணி.

"இக்கடிதம் கண்டதும் புறப்பட்டு வரவும். மாப்பிள்ளை கல்யாணராமன் இங்கு இருக்கிறார்." என அதில் எழுதப்பட்டிருந்தது. அது பானர்ஜியிடமிருந்து வந்தது.

கடிதம் பொய்யோவெனத் தாயும் மகளும் சந்தேகித்தனர்.

இரவு மெயிலில் கணவனைக் காணப்போகும் ஆவேசத்தில் கல்யாணி தூங்கவுமில்லை. கல்யாணியின் தாயார் பற்பல தெய்வங்களை வேண்டலானாள்.

ஐந்தாம் நாள் காலை மெயில்வண்டி டில்லி நகரை அடைந்தது.

தன் காதலியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றான் கல்யாண ராமன்.

காண்போர் பிரமிக்கும் விதம் அழகு இலங்க ரயிலிலிருந்து டிரங்கு பெட்டியுடனும், பிடில் பெட்டியுடனும் கீழ் இறங்கினாள் கல்யாணி.

கலியாணராமனுக்கு மனைவியின் முகத்தில் விழிக்கவும் வெட்கமாயிருந்தது. தலை குனிந்தவண்ணம் "கண்மணீ—என்னை மன்னிப்பாயோ?" என மெதுவாகப் புகன்றான்.

"மன்னிப்பது பெண்களின் இயற்கை சுபாவம்" என்று பதிலுரைத்தாள் காரிகை.

டிப்டி கமிஷனரால் போலீஸ் கிளார்க் உத்யோகம் அடைந்த கல்யாணராமன் இரண்டாம் வருடத்தில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் பயிற்சிக்குச் சென்று வெற்றியடைந்தான். தற்போது டில்லிநகரின் இன்ஸ்பெக்டராய் மாதம் 200—ரூபாய் சம்பளம் பெற்றுவருகிறான். மனைவி கல்யாணியுடன் மனம் ஒத்துஜ்வலிக்கின்றான். மங்களத்தம்மாள் தன் பெண் கல்யாணியுடன் இருந்து வருகிறாள். டிப்டி கமிஷனர் கல்யாணராமனுக்குக் கல்யாணியைச் சேர்த்தது கல்யாணியின் அதிர்ஷ்டமே யல்லவா? சுபம்:

# பரமன்பால் பற்றியகாதல்

"குஞ்சு"

இறைவன்மீது அளவு கடந்த பக்தியேற்படும்பொழுது, பலவித பாவனைகளால் இறைவனை வழிபடுதல் நம் நாட்டில் நெடுநாட்களாக நடந்து வரும் பழக்கமாகும். அப்பேர்ப்பட்ட பாவனைகள்தான் இறைவனை நாயகனாகவும், நாயகியாகவும், குழந்தையாகவும் மற்றும் பலவித முறையிலும் வழிபடுதல். ஆனால் நாயகி பாவத்தை மேற்கொண்டு பக்திசெய்தல் கத்தியின் கூர்ப்பக்கத்தின் மீது நடப்பதைப்போன்ற கஷ்டமான காரியம் என்று ஸ்வாகவாசி. திரு. வா. வே. சு. அய்யர் கருதுகிறார். நம்மாழ்வார், பெரியாழ்வார் முதலிய வைஷ்ணவப் பெரியார்களும் இத்தகைய பாவத்தைக் கையாண்டுள்ளார்கள். திருக்கோவையாரையும், ராமலிங்கசுவாமியின் அருட்பாவையும் அனுபவித்த தமிழருக்கு இவ்விதம் வழிபடும் முறை புதிதாகப் படாது. சமீபகாலத்திற்குமுன் காலஞ்சென்ற ஆசுகவி. திரு. சுப்பிரமண்ய பாரதியாரும் கண்ணனைப் பல பாவனைகளில் புகழ்ந்து போற்றியுள்ளார். அதில் அவர் தன்னைப் பெண்ணாகப் பாவித்துக் கண்ணனைக் காதலனாகக்கருதும் பாடல்கள் கவிதைரசம் கனிந்து சொட்டுபவை.

பெண்கள் நெஞ்சில் காதல் சுரந்தவுடன் தாங்கள் விழையும் கணவனை மணக்கும் பாக்கியம் கிடைக்குமோவென்று ஐயம் கொள்வதுண்டு. அப்பொழுது குறத்திகளிடம் குறிகேட்பார்கள். அவ்வழக்கம் பிராசீனமாகவே இருந்து வருகிறது. அதுபோல சிவபெருமான் மீது காதல் பிறந்தவுடன் நாயகி பாவத்தை அனுபவிக்க விரும்பும் ராமலிங்கசுவாமிகள் குறமகளிடம் குறிகேட்கும் பாவனையை கையாண்டது மிகவும் பொருத்தமுடையதாகும் எனவே ராமலிங்கசுவாமிகள்நாயகிபாவத்தின் உளக்கருத்தை

‘ நந்திமகிழ்வாய்த்தரிசிக்க நடனம் புரியு நாயகனார்
அந்தி நிறத்தார் திருவொற்றி யமர்ந்தாரென்னை யணைவாரோ
புந்தியிலளென்றனை யாரோயாதுந் தெரியேன் புலம்புகின்றேன்.
சிந்தைமகிழக் குறமடவாய் தெரிந்தோர் குறிதான் செப்புவையே.

யென்று கேட்கின்றார்.

அம்பலத்தே யாடுகின்ற அரசருக்குப் பாமாலை யணிவித்துத் தன்னாவி, உடல் உடைமை மூன்றையும் அற்பணஞ்செய்து விடுகின்றார். இனி பரமனே தன் தலைவன். வரம்பில் காதலுக்கும் உரிமையாளன் அவனே. எனவே தன்னுடன் உளங்கலந்த பிரானின் உடற்பிரிவை யெங்கனே சகிப்பது? தலைவனைபிரிந்த தலைவியின் நிலைமை தாண்டிற் புழுவினை யொத்தது. தலைவனிடம் தன் மெய்பாட்டைத் தெரிவிக்கப் பறவைகளைத் தூது விடத் துணிகின்றாள். உடனே யருகு நின்ற ஒரு நாரையை விழித்து,

'கண்ணனெடு நாண்மண்ணிடந்துங் காணக்கிடையாக் கழலுடையார்
நண்ணுமொற்றி நகரார்க்கு நாராய்சென்று நவிற்றுயோ
வண்ணனலு மதுபவனி கண்டவன்று முதலாயின்றளவும்
உண்ணுமுணவோடுறக்கமு நீத்துற்று ளென்றிவ்வொரு மொழியே?

யென்று இரங்கிக் கூறுகின்றாள்.

மேற் கூறியவாறு தூதுவிட்டும் யாதொரு பயனையும் தலை மகள் அடைந்தாளில்லை. எப்பொழுதும் தன் நெஞ்சைக் கொள்ளை கொண்டான் மீதே ஞாபகம். தலைவ னருகிலில்லாத சமயம், வேண்டும் பொருளை வெறுப்பதும், உணவற்றிருப்பதும், மலர்பிடியாமையும், உறுதியற்ற குணமும், எதிலும் குழப்பங்கொள்வதும் உண்மைக் காதலை வளர்க்கும் பெண்களிடம் ஏற்படுவதுண்டு. அந்நேரங்களில் தங்கள் தோழிகளிடம் சென்று தங்கள் மெய்பாட்டைக் கூறுவர். ஆனல் நாயகரைச் சிறிதும் குறை கூறுவதில்லை.

சினவிற்றடக்கைத் தீம்புனலூரனைக் கனவில்கண்டதாகப் பின் வருமாறு தோழியிடம் கூறும் பாவனையாகத் திருக்கோவையாரில் மாணிக்க வாசகர் பின்வருமாறு கூறுகின்றார்.

'தேவா சுராரிறைஞ்சுங் கழலோன் தில்லை சேரலர்போல்
ஆவா கனவுமிழந்தேன் நனவென்று அமளியின்மேற்
பூவாரகலம் வந்தான் தரப்புலம்பாய் நலம்பாய்
பாவாய் தழுவிற்றிலேன் விழித்தேன் அரும்பானயேன் ?

[நலம் பரந்த பாவாய் அமளியின்மேல் மாலையுடைய மார்பைத் தலைவன் வந்துதர, அவனெடுமேவா மையிற் பின்னுந் தனிமையாய் நனவென்று மயங்கித் தவறு நினைந்துத் தழுவிற்றிலேன். இம்மட்டோ! பொருத்தற்கரிய தீவினையை யுடையேன் விழித்துவிட்டேன். அதனல் தேவாசுரரும் வணங்கும் கழலை யணிந்த பெருமானது தில்லையைச் சோராதாரைப்போலானேன். அந்தோ! கனவால் வரும் இன்பத்தையும் யிழந்தேன் பாவியேன் !] யென்று தன் யேமாற்றத்தைக்கூறுவது மிகவும் பொறுத்தமாகவே யுள்ளது.

மற்றுந் தோழியிடம் தான் கணவனை நினைக்குந்தோறும் உண்டாகும் இன்பத்தின் தன்மையை,

'மன்றுடுங்கணவர் திருவரவை நினைக்கின்றேன் மகிழ்ந்து
நினைந்திடுந்தோறும் மனங்கனிவுற்றுருகி
நன்றுவின் பாற்றிரளி னறுநெய்யுந் தேனும் நற்கருப்பச்
சாறெடுத்த சர்க்கரையுங்கூட்டி
யின்றூந வுண்டதென வினித்தினிதுப் பொங்கியெழுந்தெனையும்
விழுங்குகின்றது'

யென்று கூறும்பொழுது இறைவன் பால் எத்துணைக் காதல் கொண்டுள்ளாரென்பது விளங்கும்.

தன் அன்புடைத் தலைவனின் வருகையில் பூரண நம்பிக்கை பிறந்துவிடுகின்றது. எனவே எல்லையற்ற ஆனந்தத்தில் மூழ்கி மணவாளர்வரும் தருணமீதென்று கூறி அவள் செய்யவேண்டிய பணியைக் கூறுகின்ருள்.

அரும்பொன்னே யாரெனது கணவர்வருதருணம் ஆயிழைமீது
ஆதலினுல் வாயின் முகப்பெல்லாம்
விரும்பு தோரணங்கொடி பழுத்தகுல வாழை
விரைக்கமுகு தேங்கிளநீரோனைப்பலவும் புனைக
கரும்பு நெல்லின் முளைநிறைநீர்க் குடமிணைந்த
கயலுங்கண்ணுடி கவரிமுதலுண்ணுடியிடுக
இரும்பொடு கல்லொத்த மனங்களுங் கனியவுருக்கும்
இறைவர்திரு வரவெதிர்கொண் டேத்துவதற் கினிதே.

இத்தகைய முறையில் பரமன்பால் நிமிர்ந்த காதலைக்காட்டி வழிபட்ட முறையானது தமிழகத்தார்க்கே ஓர் சிறந்த வழிகாட்டியாகும். மதுரையமைச்சர் மணிவாசகப்பெருமானும், சிதம்பர ராமலிங்க சுவாமிகளும், பக்திரஸ வெள்ளத்தில் மூழ்கி திருக்கோவையாரையும், திருவருட் பாவையும் முறையே யீந்து தமிழ்நாடனைத்தையும் கவிதை யின்பத்திலும், சிவபக்தியிலும் ஈடுபடுமாறு செய்ததற்காக அவர்களை நாம் எத்துவோமாக.

# இந்தியப் பெண்களின் நிலை.

Dr. G. பக்தவத்ஸலம், M. B. (H)
G, O. W. F. (Scot)

ஆடவரின் மனதைக் கவரும் தன்மைபடைத்தவரும் நுண்ணறிவுடையவர்களுமான பெண்கள்தான் இவ்வுலக வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாவார்கள். இவர்கள் நிலை நம் நாட்டில் எவ்வாறு இருக்கின்றது என்று ஆராய்வதே இவ்வியாசத்தின் கோள்.

'எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பெரும் பேதமைத்தே' என்றும் 'பேதமை என்பது மாதர்க்கணிகலம்' என்றும் இன்னும் இவைபோன்ற சில போலி நீதிகளைக்கொண்டும் பெண்கள் எவ்வளவு கற்றபோதிலும் அவர்கள் பேதமைக்குணம் நீங்கப்போவதில்லையென்றும் அநேகர் கூறி பெண்களை கல்விகற்கவிடாது வீட்டிற் சட்டிசுரண்டவைத்து தாய்நாட்டை வீணே கெடுக்கின்ருர்கள். இது கண்டு வருந்தித்தான் நம் பாரதியாரும்.

"பெண்ணிற்கு ஞானத்தை வைத்தான் புவிபேணி வளர்த்திடுமீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல மாதரறிவைக்கெடுத்தார்"

என்று கூறிப்போந்தார்.

நம் நாடு மேன்மையடைய முதன்மையாகவேண்டியது பெண்கல்வி பெண்கள் கல்வி கற்றால்தான் நாம் கல்விகற்ற குடும்பத்தை அடையலாம். இது யாங்ஙனம் கூடுமென்பதை விளக்குதும். ஓர் கல்வி கற்ற பெண், தன் ஓய்வு நேரங்களில் கல்வி கற்காத பெண்களைப்போல் வம்பர் மாசபைகூடி, வீண் பேச்சுப்பேசாது நீதியைத் தரத்தக்க உயரிய புத்தகங்களை வைத்துப் படித்துக்கொண்டிருப்பாள். தாய் புத்தகமும் கையுமாய் இருப்பதைக்கண்ட சிறிய குழந்தைகளும் பூத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு படிக்க ஆரம்பிக்கும். மேலும் தாய் கற்றிருப்பதினால் பிள்ளைகளுக்கு கற்பித்துக் கொடுக்கலாம்; கொஞ்சம் படித்த பிள்ளைகளாயின் நல்லநூல்களைத்தேடி ஆராய்ந்து கொடுத்துப் படிக்கும்படி செய்யலாம். இத் தொழில் ஏன்கற்ற ஆடவர் செய்யலாகாது என்ற வினா எழலாம். பெரும்பாலும் குழந்தைகள் சிறு பிராயத்தில் தாயிடத்திலேயே தங்கியிருக்கும். ஆடவர் தத்தம் தொழில் நிமித்தம் வெளியிற் சென்றுவிட நேரிடும்; வீட்டில் தங்குவது அரிது. இவைகளையெல்லாம் கருதித்தான் பால்பர்ட் என்ற பிரான்சு தேசத்துமந்திரி 'ஓர் பெண் கல்வி கற்பதனால் நாம் கல்வி கற்ற குடும்பத்தை யடைகிறோம்' என்று பொருள்பட (By educating a girl you get an educated family) but by educating a boy you get an educated individual) என்று கூறியிருக்கிறார். இதே கருத்துத்தொனிக்க சமீபத்தில் நடந்த பெண்கள் கூட்டத்தில் குவாலியர் மகாராணியார் "Education of a single girl means the uplifting of a whole family in a larger sence than the education of a single man" என்று கூறியது கவனிக்கத்தக்கது. விரிவஞ்சி ஈண்டு நின்று கொண்டு எடுத்த விஷயத்தை நோக்குவாம்.

ஆடவர்கள் அடாத செயல் செய்வதைக்கண்ட பெண் ஒருத்தி இது தகாதசெயல், இதில் முயல்வாயாகில் வீணில் அழிவாய் என்று கூற முன்வந்தால் 'தையல் சொற்கேளேல்' என்று தமிழ் மூதாட்டி சொல்லிச் சென்றிருக்கிறாள் என்று வாய்மதம் பேசி, நற்சொற்களைத் தட்டி அல்லற்பட்டு உழல்கின்றார்கள். ஓர் பெண், தான் கொண்ட கணவனை அவசியமேற்படும்பொழுது கண்டிக்க முற்பட்டால் அவள் கற்பில்லாதவள் என்று கூறி அதற்குச் சான்றாக 'கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை' என்ற நீதி மொழியை எடுத்துக்காட்டுகிறார்கள். அந்தோ! என்ன பேதமை!

இவற்றிற்கெல்லாம் மேலாகப்பேசும் சுதந்திரத்தையும் எடுத்துவிட "பெண்ணொருத்தி பேசிற் பெரும்பூமிதானதிரும், பெண்ணிருவர்பேசில் விழும் வான்மீன்கள்" என்ற செய்யுளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பேச்சின் சுதந்திரமும் பெண்கள் பாலினின்றும் போய்விட்டால் அவர்கள் வீட்டை அலங்கரிக்கும் பொம்மையே ஆவார்கள் என்பதற்கு ஐயமில்லை. ஓர் தமிழ்ச் செய்யுளில் ஆடவர்களின் உயிரை வாங்கத்தோன்றிய கூற்றுவர் பெண்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. மற்றோர் செய்யுளில் பெண்களினால்தான் ஆடவருக்கு நரகமேற்படுகிறதென்பதை அணி பெற

" தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாமமேகலை மங்கையரால் வரும்
காமமில்லையெனிற் கமெ்கேடெனும்
நாமமுமில்லை நகரமுமில்லையே" என்று தொகுக்கப்பட்டிருக்கிறது.

இம்மேற்கோள்களையும் ஆடவரின் அபிநயங்களையும் கண்ட பெண்கள் ' இவ்வுலகில் பெண்ணுய்ப் பிறத்தலிலும் மண்ணுய்ப்பிறத்தல்மேல் ' என்றும் கிடைத்தற்கரிய பிறவியைப் பெற்றும் "இப் பெண் ஜென்மம் ஏன் எடுத்தோம்' என்றும் வருந்துகிருர்கள்.

நம் நாட்டில் பெண்களின் நிலை வெகுகாலமாகத் தாழ்ந்திருக்கிறது என்று ஒருவன் கூற முன்வந்தால், சிலர், நீங்கள் சொல்வது முற்றிலும் தவறு; நமது முன்னோர்கள் கல்விக்கடவுளையும், செல்வத்தையும், பூமியையும், நதியையும், மலையையும், இராகங்களையும் பெண் தெய்வங்களாக உருவகப்படுத்தியிருக்கிருர்கள். இவை உண்மையென்று ரூபிக்க பழய காலத்து நூல்கள் இருக்கின்றன. மேலும் இன்றைக்கும் யாங்கள் இயற்கைப் பொருள்களைப் பெண்களாகத்தான் உருவகிக்கிறோம் என்று கூறுகிருர்கள். இவர்கள் பெண்களை நாயினும் கடையாக நடத்திப் புத்தகத்தில் உருவகப்படுத்தினுல் மாத்திரம் போதுமா ? மற்றும் சிலர் திருக்குறளிலுள்ள

" தெய்வம் தொழாள் கொழுநற் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" என்ற குறளை எடுத்துக்காட்டி யாங்கள் தேவர்களையும் அடக்கி ஆளும் சக்தியும், இயற்கையை மாற்றும் ஆற்றலும் பெண்களுக்குண்டென்று கூறியிருக்கின்றோம் என்கிருர்கள். இது வாஸ்தவம்தான். நம் நாட்டில் இப்பொழுது எத்தனை பெண்கள் இருக்கிருர்கள். அவர்களில் யாராவது ஒருவர் முன் வந்து, மழை பெய்யென்ருல் பெய்யுமா ? பெய்யாதே ! இவர்களை யெல்லாம் கற்பற்றவர்கள் என்று கூறுவதா ? இக்கேள்வி கேட்பதினுல் யான் திருவள்ளுவர் செய்த திருக்குறளை அவமதிப்பதாகக் கருதக்கூடாது. அதை அன்புடன் போற்றிப்படிப்பவர்களில் யான் ஒருவன். ' மாதுகற்புடை மங்கையர்க்கோர்மழை ' யாம் ; நம் நாட்டில் கற்புடைய மங்கையர்க்காக எத்தனை மழை பெய்கிறதென்று ஊன்றி நோக்கினுல் ஓர் மழை கூடக்கணுேமே !

இன்னும் சிலர் பெண்களுக்கு இயற்கையிலேயே உடற்கூற்றில் வித்தியாசமிருக்கிறது; ஆகையால் பெண்பாலர் ஆண் பாலருக்கு அடிமையாகத்தான் இருக்கவேண்டு மென்கிருர்கள். இவர்கள் கூற்றைச் சித்தசமாதானத்தோடு ஆராய்ந்தால் ஆண்பாலருக்குப் பெண்பாலர் அடிமையாகத் தான் இருக்கவேண்டுமென்று 'பால் அடிமை' கூறும்போது ' நிற அடிமை ' யேற்படுவதும் சகஜமாகும். சுருங்கக்கூறுமிடத்து அடிமை நீங்கப்பெண்கள் உயர்ச்சி அவசியம்.

இவ்வியாசத்தினுல் பெண்கள் உத்தியோகம் முதலிய உயர்பதவிகளை வகிக்கவேண்டுமென்றும், ஆடவர் ஆகாரத்திற்காக பெண்கள் முன்னிலையில், வாசலில் முழங்கைசொறிந்துகொண்டு காத்திருக்கவேண்டு

மென்று கூறுவதாகக் கருதக்கூடாது. பெண் நலன்தான் ஆண்நலன்; ஆண் நலன்தான் நாட்டின் நலன், ஆகவே பெண்களை வீண் என்பு தோல் போர்த்த உடம்பு என்று கருதாதீர்கள். தியாகம், தொண்டு, தன்னல மின்மை நிறைந்தவள் பெண்; நம்மைப்பெற்றவள் பெண்; நம்முடன் பிறந்தவள் பெண்; நம்மைப்போற்றி வளர்த்தவள் பெண்; நம்முடன் இயைந்து வாழ்பவள் பெண்; ஆகையால் அன்பர்களே, பெண்களுக்குரிய உரிமையை அளித்து நாட்டை மேன்மையடையச் செய்வீர்களாக.

சுபம்! சுபம்!!

## சிசு சம்ரக்ஷணை.

### குழந்தையின் உணவு.

(ஹக்கீம் சாகிபு.)

குழந்தை பிறந்ததுமுதல் 9—மாதங்கள்வரைத் தாயின் முலைப்பாலையே அதற்கு ஊட்டவேண்டும். எக்காரணம் பற்றியாவது குழந்தைக்கு தாயின் பாலைக் கொடுக்கமுடியாத சங்கட நிலைமைகள் ஏற்பட்டாலன்றி வேறு எவ்வித செயற்கைப்பாலையும் ஊட்டக்கூடாது. கருப்பைக்குள் குழந்தை தோன்றிய உடனேயே, தாயின் முலைகளிலும், குழந்தை வெளியே வந்தவுடன் அருந்துவதற்கேற்றபடி பால் ஊறுகின்றது. இது இயற்கை நியதி பால்கொடுக்கச் சக்தியுள்ள தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பால்குடி மறந்து போம்வரை முலைப்பாலைக் கொடுத்துவருவது மிகவும் அவசியமாகும். முலைப்பால் சுத்தமாக இருத்தல்வேண்டும்; அன்றேல் குழந்தை சுகமாக வளராது. எனவே பாலை உற்பத்திசெய்துகொள்ளவேண்டும்.

டாக்டர் யூ. ராமாராவ் அவர்கள், பிரஸவகாலத்தில் செய்யவேண்டிய முதல் உதவிகள் என்ற நூலில் பின்வருமாறு கூறுகின்றார்:— சிசுக்களை போஷிப்பது இரண்டுவிதம்; ஒன்று தாய்ப்பாலூட்டுதல், மற்றது புட்டிப் பால் ஊட்டுதல். சிசுவிற்கு மேலான ஆகாரம் தாயின்முலைப்பாலே. ஏனெனில் தாய்ப்பாலை ஜீரணிக்கக்கூடிய சக்திதான் அப்பொழுது பிறந்த குழந்தையின் இறைப்பைக்குண்டு. தாய்ப்பால் ஊட்டி வளர்க்கப்படுங் குழந்தைக்கு, புட்டிப்பால் போட்டி வளர்க்கப்பெறும்குழந்தையைக் காட்டிலும் மாந்தம் முதலிய வியாதிகள் மிகமிக்க கம்மி. ஆனது பற்றிக் கூடுமானவரையில் ஒவ்வொரு தாயும் தன் குழந்தைக்குத் தன் முலைப்பாலையே ஊட்ட வேண்டும்.''

மேலும் தாய்மார்கள் சுத்தமாக இருப்பதுடன் தங்களுடையதேகம் வேண்டிய அளவுக்கே சீதோஷ்ண ஸ்திதியைக் கொண்டதாகச் செய்தல் வேண்டும். அவர்கள், அஜீர்ணம், வயிற்றுப்போக்கு, வயிற்று மந்தம், வாய்வு முதலிய வியாதிகளை உண்டுபண்ணும் காய்கனி கிழங்கு முதலிய வஸ்துக்